வார இதழ்
# இலக்கு
www.ilakkunews.com
"தேச விடியலின் நம்பிக்கை ஒளிவீச்சு"

அதி உயர்
கண்காணிப்பு கமராக்களை
பொருத்திக் கொடுக்கின்ற ஒரே ஒரு நிறுவனம்
Arun
Technology at the Speed of Life
Software Developers
Tel : 021 221 5828 | 0777 123 313
No. 273, Hospital Road, Jaffna.

இதழ் – 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ20.00 | தொடர்பு : 076 527 0430




## ஆழக்கடலெங்கும் காலத்தடை வெல்லுமா?

இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் பொதுவான செயற்திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜப்பான் வலியுறுத்தியுள்ளது. ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் தோமோமோ இனதாவை சந்தித்தபோதே அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார்.

தொடர்ச்சி 10





# மஹிந்தர் சம்பந்தர் இரகசிய பேச்சு
# மாறுமா தமிழரின் தலைவிதி?

## ஆட்சியை மாற்ற உதவினால் அரசியல் தீர்வு
## நிபந்தனையை விரித்தார் மஹிந்தர்? ஏற்றாரா சம்பந்தர்?

தொடர்ச்சி 10

## யாழ். புகையிரத நிலையத்தில் புகையும் மனங்கள்!

கடந்த ஆட்சிக்காலத்தின் வடபகுதிக்கான வரப்பிரசாதங்களில் யாழ்ப்பாணத்தின் புகையிரதம் நிலையமும் ஒன்று. இது முபபது வருடத்தின் பின்னர் வடபகுதி மக்களுக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம்.

தொடர்ச்சி 10



தொடர்ச்சி 10

## குப்பை மேட்டால் சரிந்த உயிர்களைப்போல் குருதியில்பசரிந்தவர்களுக்கும் நியாயம் தேவை!

அண்மையில் மீதொட்டமுல்ல பிரதேசத்தில் குப்பை மேடு சரிந்து ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடம் அரசாங்கம் பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளது. அத்துடன் அனர்த்தத்தின் போது இடம்பெயர்ந்துள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## இயேசுவே முதலவர் விக்கியை மன்னித்தருள்வீர்!



2000 வருடங்ளுக்கு முன் இயேசுகிறிஸ்து ஒரு குற்றவாளியாக இனங்காணப்பட்ட பாவி. அவருக்கு அன்று மரணதண்டனை வழங்கப்பட்டது. அத்த கைய ஒருவரை மக்கள்

தொடர்ச்சி 10



## அங்கஜனின் அரசியல் நாடகம்
### வேலையற்ற பட்டதாரிகள் பாய்ச்சல்!

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க செயலாளர் மனுல பெரேரா. வேலையற்ற பட்டதாரிகள்

தொடர்ச்சி 10


## 'அ' முதல் "ஆ" வரை
விறுவிறுப்பு அரசியல் தொடர்...
### ஆச்சி மதவிளேறி குந்திய இடம் மதவாச்சி...

பக்கம் 06

## மக்களை வருத்தும் மண்கொள்ளை மாபியா!

பக்கம் 07

## மறுபடியும் பொய்யுரைக்கிறார் மாவை



தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பதவி விலகவேண்டுமாக இருந்தால் அதனை செய்வதற்கும் தயாராக இருப்பதாக மாவை சேனாதிராஜா அண்மையில் தெரிவித்திருந்தார்

தொடர்ச்சி 10

## ஊடறுப்பான்

தமிழரின் வாக்குப் பலத்தால்
மத்தியில் மட்டும்
ஆட்சிகள் மாறுது.
தமிழர் வாழ்வின்
காட்சிகள்
எப்படித்தான்
மாறுமோ?...



## அழிவிலிருந்து நிமிரும் பனைவளம்!

பக்கம் 09 நேர்காணல்

கண்காணிப்பு கமெராக்கள்
விசேட விலையில்...




உங்கள் காரியாலயங்கள், தொழிற்சாலைகள்
மற்றும் வீடுகளின்பாதுகாப்பினை கண்காணிக்க
குறைந்த கட்டணத்தில் ஒருவருட உத்தரவாதத்துடன்
ஒரே நாளில் பொருத்தி தருகிறோம்...

UNITY COMPUTERS
UNITY PC SYSTEMS
PROVIDING PROFESSIONAL COMPUTER REPAIR SERVICES

CCTV SPECIALIST IN NORTH
SPECIALIZING IN ALL TYPES OF SECURITY CAMERA FOR HOME & OFFICE
FRIENDLY AND EXPERIENCED
WE ARE LOCAL NEAR TO NALLUR CITY
We Guarantee our Work
Virus Removal | Data Transfer | Data Recovery |
Dual Boot Options | Repairing Crashed Hard Drives |
Upgrades | System Checkup & Optimization
OS Installation | Hardware Installation | Software | Installation

Computer & Accessories Wholesaler,
Computer Repairing & Service



No-74, Illuppaiyadi Junction, Palali Road, Jaffna. | No-394 1/1, Galle Road, Wellawatta, Colombo 06.
021 222 2666 | 077 344 6194 | 011 236 1777 | 077 789 0532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Today's our creation-Tomorrow's best memories

# STUDIO MAYU

JAFFNA

## Wedding Photography & Showroom









STUDIO MAYU
JAFFNA

41 Rakka Road, Jaffna. +94 77 1552006 / +94770733477 Videomayu@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகை அச்சுறுத்திய உயிர் கொல்லிக்கு ஆப்பு!

முதன் முறையாக டெங்கு காய்ச்சலுக்கான தடுப்பூசி ஒன்றுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது. டெங்கு வெக்சியா என அறிமுகமாகியுள்ள இந்த தடுப்பூசி, இருபது வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பயனாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

டெங்கு அதிகமாக பரவும் தென்கிழக்கு ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் ஆயிரக் கணக்கான சிறுவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த தடுப்பூசி 70 வீதம் வெற்றியளித்துள்ளதாக கூறும் உலக சுகாதர ஸ்தாபனம் மெக்சிக்கோ, பிறேசில், எல்சல்வடோர் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு இந்த தடுப்பூசியை பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தள்ளது.

அத்துடன் ஒன்பது வயதைக் கடந்த ஒருவருக்கு வருடத்திற்கு மூன்று தடவைகள் இந்த தடுப்பூசியை ஏற்றமுடியும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. வைரஸில் காணப்படும் குழப்ப நிலை காரணமாக டெங்கு காய்ச்சலுக்கான உறுதியான தடுப்பூசியை கண்டுபிடிக்க மருத்துவ துறையினால் இதுவரை முடியவில்லை. 120 நாடுகளில் வருடாந்தம் 390 மில்லியன் மக்கள் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்படுகின்றனர். இந்த வருடத்தின் கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் இலங்கையில் டெங்கு காய்ச்சலால் 53 பேர் உயிரிழந்துள்ளடன், 29,000 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ள தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவதற்குள்ள இயலுமை தொடர்பில் ஆராய்ந்து வருவமாக சுகாதார அமைச்சின் செயலாளர் அநுர ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

# பட்டதாரிகளுக்கு தீர்வு வழங்கும் சீரான திட்டத்தை அமுலாக்க நடவடிக்கை

நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையோடு சீரான வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவாரத்தை நடத்தப்பட்டதாக நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் சங்கத்தின் சிரேஷ்ட உப செயலாளர் அமைச்சர் ரஞ்சித் சியம்பளாபிட்டிய தெரிவித்து ள்ளார்.

குறித்த திட்டத்தை பிரதமர் அங்கீகரித்துள்ளதாகவும், அதற்கு அமைச்சரவையின் ஆதரவும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைச்சர் சியம்பளாபிட்டிய குறிப்பிட்டார். அரசாங்கத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்காக பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இதன் போது ஒவ்வொரு துறைகளிலும் பொருத்தமானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென அமைச்சர் மேலும் கூறினார்.



# வியட்நாம் இலங்கை கடற்றொழில் அபிவிருத்திக்கு உதவி!

நாட்டின் கடல் வள அபிவிருத்திக்காக வியட்நாம் தேவையான அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வியட்நாமிற்கான உத்தியோகப்பூர்வ விஜயத்தில் இணைந்துக் கொண்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மஹிந்த அமரவீர, அந்த நாட்டு கடற்றொழில் அதிகாரிகளுடன் நடாத்தி பேச்சுவார்த்தையின் பிரதிபலனாகவே இந்த உதவித் திட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. வியட்நாம் நீரியல்வள தொழில் தொடர்பான கல்வி சுற்றுப் பயணத்திலும் அமைச்சர் மஹிந்த அமரவீர பங்குப்பற்றியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. ஏற்றுமதி மீன் வகையான பெஞ்ஜியஸ் என்ற மீன் வகையை இலங்கையில் உற்பத்தி செய்கின்றமை குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மீன்வகையை ஏற்றுமதி செய்வதன் ஊடாக ஒரு கிலோகிராமிற்கு 3000 ரூபா கிடைப்பதுடன், இதற்காக பாரிய கேள்வி நிலவுகின்றது எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# வரி செலுத்துவோருக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் அறிவிப்பு

தேசிய உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் கட்டளைகளுக்கு அமைவாக மீண்டும் அறிவிக்கும் வரையில் வற் மற்றும் தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி அறவிடப்படும் என்று உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கல்யாணி தஹாநாயக அறிவித்துள்ளார்.

2017ம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் முன்மொழிவுக்கமைவாக திருத்தம் செய்யப்பட்ட வரிக்கொள்கை தொடர்பில் இந்த அறிவிப்பை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



# சைட்டம் கல்லூரியை கொழும்பு பங்குச் சந்தையின் கீழ் பட்டியல் படுத்த முடிவு!

மாலபே, சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியை கொழும்பு பங்குச் சந்தையின் கீழ் பட்டியல் படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதம அதிகாரிகளை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். எதிர்வரும் சில வாரங்களில் அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற பதவிகளிலும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் குறித்த இந்த நடவடிக்கை இடம்பெற கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இணையத்தின் மூலம் கடவுச் சீட்டுக்களை அனுப்ப நடவடிக்கை!

இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தை நவீனப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் கடவுச் சீட்டுக்களை இணையத்தின் மூலம் அனுப்பி வைக்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த குடிவரவு குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்குத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, குறித்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக கடவுச் சீட்டுக்களை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை இணையத்தின் மூலம் அனுப்பி வைக்கும் வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணத்தை கடன் அட்டைகள் (credit card) மூலட் வழங்கவும் வாய்ப்பு கிட்டியுள்ளது. இவ்வருட இறுதிக்குள் குறித்த இந்த வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும், குடிவரவு குடியகல்வு திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# இலங்கைக்கு ஆறாவது இடம்!



2017ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வேகம் நூற்றுக்கு 4.7 வீதமாக மதிப்பிடப்பட்டுள்ளதாக தெற்காசிய எல்லை தொடர்பில் உலக வங்கியினால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கைக்கமைய தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டிற்கமைய மாலைத்தீவு (4.5%) மற்றும் ஆப்கானிஸ்தான் (2.4%) ஆகிய நாடுகளை விட இலங்கை முன்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. புதிய அறிக்கையின் படி அதிக பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கும் நாடாக இந்தியா பெயரிடப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் இந்தியா 7.2 பொருளாதார வளர்ச்சி மதிப்பிடப்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இங்கு பங்களாதேஷ் மற்றும் பூட்டான் நூற்றுக்கு 6.8 வீத வளர்ச்சியையும் நேபாளம் நூற்றுக்கு 6 வீத வளர்ச்சி வேகத்தை எதிர்பார்க்கின்ற நிலையில் பாகிஸ்தான் 5.2 வீத மதிப்பீடாக காணப்படுகின்றது. நிர்மாணிப்பு, சந்தை மற்றும் நிதி சேவை பிரிவுகளில் காணக்கூடிய வளர்ச்சியுடன் இந்த அதிகரிப்பை எதிர்பார்ப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.



# இலங்கையில் டிஜிட்டல் வகுப்பறை அறிமுகம்!

உலகின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அமைய நாட்டினது பாடசாலைகளில் டிஜிட்டல் முறையில் கல்வி பயிலும் மாதிரி வகுப்பறைகளை, தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது. இதனடிப்படையில் மாதிரி டிஜிட்டல் முறையில் கல்வி பயிலும் வகுப்பறை ஒன்று கல்வி அமைச்சில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. தற்போது அமைக்க பட்டிருக்கும் இந்த டிஜிட்டல் முறையில் கல்வி பயிலும் வகுப்பறைகளை மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் பார்வையிடவும் பயன் பெறவும் முடியும். தற்போது நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இத்திட்டத்தை அமுல்படுத்த உபகரணங்கள் வழங்கல் உட்பட ஏனைய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பொறுப்பு கூற வேண்டியவர் மஹிந்தவே – பிரதி சபாநாயகர்



மீதொட்டமுல்லை குப்பைமேடு அனர்த்தத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார். மல்வத்து பீட மகாநாயக்க தேரரரை பார்க்கச் சென்ற பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கு
www.ilakkunews.com

"தேச விடியலின் நம்பிக்கை ஒளிவீச்சு"

ஆசிரியர்பீடம் : 6ம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை.
செய்தி : 076 527 0430
மின்னஞ்சல் : ilakkuenews@gmail.com
விளம்பரம் : 077 138 9738 / 077 148 0571

## காலச்சக்கரம் நிறுத்தப்படும்வரை!....

**வாசகர்களுக்கு வணக்கம்...!**

தமிழ் மக்களுக்கான நீதியும் அரசியல் தீர்வும் கிடைப்பதென்பது கைக்கு வந்தும் நழுவிப்போகும் காட்சி பொருளாகவே இற்றைநாளவரை இருந்துவருகின்றது. இதுபோலத்தான் தமிழ் மக்களது போராட்டங் களும்.

இன்று காணாமல் போனவர்களை தேடுவது ஒரு புறம் இருக்க கண்முன்னே கடத்தப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடும் உறவுகளின் உணர்வுகள் என்பது மிகவும் சொல்லில் வடிக்க முடியாததொன்று. காணாமல் போனது இவர்களால் தான் என்று தெரிந்தும் தீர்வு தாருங்கள் என கேட்டு உறவுகள் நெடுநாளாக போராடுகின்றனர். இதற்கான தீர்வு நீதியினால் தான் வழங்கமுடியும். ஆனால் அதை வழங்குவதில் தான் இங்கு தாமதம் நிலவுகின்றது.

தமிழர்களுக்கு போராட்டம் என்றும் புதிதல்ல. ஆனாலும் தீர்வு மட்டும் என்றும் எட்டாக்கனியாகவே காணப்படுகின்றது. ஆனாலும் இன்று நடைபெறும் போராட்டங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்களின் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு குறிப்பாக அரசியல் சுயலாபமற்ற போராட்டங்களை மக்கள் உருவாகி அவற்றில் வெற்றி பெற்றுள்ளதை கண்கூடாக காணமுடிந்துள்ளது.

இன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டங்கள் மட்டுமல்லாது அடிப்படை உரிமைகளின் போராட்டங்களும் அலைகளாக தெருவெங்கும் மோதிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் போராடும் இவர்களுக்கு நீதி மட்டும் அல்ல அனுசரணை வழங்க அரசியல் தரப்பும் கூட கிடைக்கவில்லை. "புரட்சி என்பது ரோஜாக்களால் ஆன மெத்தை அல்ல. அது நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் இடையேயான போராட்டம்" என ஃபிடல் காஸ்ட்ரோ போராட்டங்கள் பற்றி அழகாக சொல்லிச் சென்றுள்ளார்.

இது எமது மக்களிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. ஆனாலும் அந்த அர்த்தம் உணர்ந்து போராட்டங்கள் எழுந்த போதிலும் அந்த போராட்டங்களின் வடிவம் மட்டுப்படுத்தப்பட்டு வருவதால் குறித்த போராட்டங்களின் தீர்வும் முடிவில் பரிகசிக்கமுடியாததாக மாற்ற மடைந்து விடுமோ என்ற அச்சமும் மக்களிடம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. இன்று தமிழர்களின் போராட்டம் சிறிது சிறிதாக, ஒவ்வொரு பிரச்சனையை மையப்படுத்தி பிரதேச ரீதியாக நடைபெறத் தொடங்கியுள்ளன. தமிழர்களின் போராட்டங்களை காற்று அடைக்கப்பட்ட பந்தைப்போல அரசியல் தலைமைகள் பார்த்தால் அதற்கு காலத்தின் பதில் வேறு வகையாகவும் மாற்றம் அடையலாம். இன்று தீர்வு வேண்டி நிற்கம் தமிழர்களிற்கு ஒரு ஒருங்கிணைப்பினை மேற்கொள்வது யாரென்ற கேள்வி உயர்ந்து நிற்கின்றது. காரணம் எமது நாட்டின் அரசியல் சாக்கடை என்ற கண்ணோட்டத்தில் ஆழ வேர் விட்டு விட்டது என்பதேயாகும்.

எப்படியானாலும் தீர்வை கண்டவிட வேண்டும் என்ற உறுதியுடன் கடந்த காலத்தில் கண்ட துயரங்களை உண்டு அதன் வடுக்களைப் நீராக பருகிக் வாழ்ந்து வரும் எமது மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். இது நாட்டின் அரசியல் பீடங்களுக்கே உரியது. நாட்டினதும் மக்களினதும் நலன் தொடர்பில் தமக்குரியதான கடமைகளை ஒவ்வொரு அரசியல் தரப்பினரும் உணரும் போது மக்களது பிரச்சினைகள் தானாக தீர்க்கப்பட வழிசமைக்கப்படும். அத்துடன் உரிமைபிரச்சினைக்கும் இறுதிப்புள்ளி இடப்பட முடியும்.

ஆனாலும் எமது நாட்டின் அரசியல் பிரச்சினைகளும் தீர்வுகளும் இன்று புதியதொரு காலச்சக்கரத்தில் ஏற்றப்பட்ட ஓட்டப்பட்டுக்கொண்டிருக் கின்றது. அந்த காலச்சக்கரத்தின் ஓட்டம் நிறுத்தப்பட்டு தீர்வு என்னும் பொதி இறக்கப்படும் வரை காத்திரக்கவேண்டியதும் காலத்தின் காத்திருப்பாகும்.

நன்றி
மீண்டும் ஒரு மடலில் சந்திப்போம்.
ஆசிரியர்.




# வாருங்கோ ஆளுவோம் வடக்கினிலே...

வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...
'கொட்டை போட்டு, கொட்டை போட்டு"
சுடக்கெடுத்து சோம்பேறித்தனத்தை
அசைக்க முடியா வயிறுகளை
ஆட்டியாட்டி
பொல்லூன்றிப் போகும் நிலையிலும்
பொய சொல்லி... பொய சொல்லி
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

தமிழ்த் தேசியம்
உதடுகளில் தடவி
தமிழர் தாயகத்தை தோளில் தொங்கவிட்டு
சுயநிர்ணயக் கோவணங் கட்டி
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

சிங்கள எதிர்ப்பை
வேட்டி கட்டி
சர்வதேச பூச்சாண்டியை
சால்வை போட்டு
நடக்கவே முடியாதெனினும்
'போராட்ம் வெடிக்குமென"
வாய்ப் புயல் கிளப்பியேனும்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே....

கடல்நீரை நன்னீராக்கி
மக்கள்
கண்ணீரை கடல் நீராக்கி அதன்மீது
அரசியல் கப்பல் செய்து
ஓடி மகிழ்ந்து
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

இரணைமடுத் திட்டமும்
வேண்டாம்
பொருவாதார மையமும்
வேண்டாம்
பிரேரணைகளுக்கு மேல்
பிரேரணைகள் செய்து செயற்படாத
பிரேதங்களாக்கி அவற்றை
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

அமைச்சுக்கள் ஏற்போம்
அழகாய்
கொள்ளைகள் செய்வோம் அவற்றில்
விமர்சனங்கள் வந்தால்
விசாரணைக் குழுக்கள் அமைப்போம்
விசாரணைகள் வந்தால்
மறைத்து வைப்போம்
மறைத்து வைக்க
இலஞ்சம் கொடுப்போம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

சோற்றுப் பருக்கைகளின்றி
மக்கள்
பட்டினி கிடக்கையில்
அறிக்கைகள் விட்டே
ஆறுதல் கூறுவொம்
இறந்தே போனால் பட்டினியால்
இரங்கல் கூறி
அடுத்தாரையும் கொல்வோம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

கார்த்திகை வந்தால்
சுடரை ஏற்றுவோம்
போராளிகளைக் கண்டால்
கதவைச் சாத்துவோம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே....
காணாமற் போனோரைத் தேடி
யாரேனும் வந்தால்
காணாமற் போவோம்
தமிழ் அரசியல்
கைதிகள் விடுதலை வேண்டி
உறவுகள் வந்தால்
கைதடிப் பக்கமே போகாதிருப்போம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

பாருங்கள் அங்கே
பட்டதாரிகள் போராட்டம் ஆஹா...
பாருங்கள் இங்கே
காணிகள் கோரி போராட்டம் அடடா...
அற்புதமாக இல்லை?
கண்டி "பெரஹரா" போல்....
கண்டு மகிழ்வோம்
வேடிக்கை
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

தேங்காய் உடைப்போம்
ஹிலாரி தோற்றால்
மாங்காய் பறிப்போம்
பதவிகளை மட்டும்
பறிபோகாது காத்திட
காக்காய் பிடிப்போம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

"நெல்சிப்" என்றால்
ஊழல் செய்வோம்
கேள்விகள் கேட்டால்
"கப்சிப்" ஆவோம்
வாருங்கோ அளுவோம்
வடக்கினிலே...

இருக்கும் அதிகாரங்களை
வீட்டுக்கு
எடுத்துச் செல்வோம்
அடுப்படி வரையில்
அவற்றைப் பகிர்ந்து வைப்போம்
மக்கள் கேட்டால்
மத்திய அரசு அதிகாரங்களை
பறிப்பதாக
மழுப்பிச் சொல்வோம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

பதவிகள் பெயர்களை
மனதில் பதிந்து வைப்போம்
அதற்குரிய பொறுப்புகளை
மறந்து வைப்போம்
ஆடைகள் அணிந்து
கூட்டங்களுக்குச் செல்வோம்
ஆராத்தி எடுக்கையில்
அம்பலமாகாமல்
பார்த்துக் கொள்வோம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

அமர்வுகள் நடத்துவோம்
அமர்ந்திருந்து ... எழுந்து
அடித்துக் கொள்வோம்
ஊடகங்கள் படம் பிடிக்கும்வரை
உரத்துப் பேசி
வீரம் காட்டுவோம்
பின்னர்
உணவு வரும் உண்டு மகிழ்ந்து
கைகொடுத்து காலைவாருவோம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

கல்வித்துறையை முடக்கி வைப்போம்
ஆசிரிய வளங்களை புறக்கணிப்போம்
பதவி வெற்றிடங்களில்
குடும்பங்களைக் கொட்டுவோம்
கும்மியடித்து காலத்தைப் போக்குவோம்
வாருங்கோ ஆளுவோம் வடக்கினிலே...

எதில் எம்விருத்தி வருமோ
அதில் அபிவிருத்தி செய்வோம்
குத்தகைகள் எடுத்து எம்
குடும்பங்களை வளர்ப்போம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

சொகுசு வாகனங்கள் எடுப்போம்
ஆடம்பர மாளிகைகள் பெறுவோம்
மக்கள் வேதனையில்
வீதிகள் அமைத்து
அங்கும் இங்கும்
அலைந்து திரிவோம்
வாருங்கோ ஆளுவோம்
வடக்கினிலே...

- இப்னு அஸூமத்

## பாவலன் பதில்கள்!

நீங்கள் எழுதி அனுப்பும் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார் பாவலன்.

**கேள்விகளை எழுதி எங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்...**

**வரும் வாரம் உங்கள் வாசிப்புக்கு பாவலன் பதில்கள் காத்திருக்கும்...**

ஆசிரியர்பீடம் : 6ம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை.
செய்தி : 076 527 0430
மின்னஞ்சல் : ilakkuenews@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எவருக்கிடையில் நல்லிணக்கம் வேண்டும்?

இலங்கை சுதந்திரம் பெற்று ஆண்டுகள் பல கடந்து சென்றுவிட்டன. ஆனாலும் நல்லிரவில் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதன் காரணத்தால் இந் நாட்டின் மக்கள் அனைவருக்கும் சமமான உரிமைகளும் சுதந்திரங்களும் சரியாக பகிரப் படவில்லை. இந்நிலை தொடரப்பட வேண்டும் என்பது தொடர்பில் சுயசிந்தனை செய்து பார்த்தால் அதன் உண்மை நிலை தெளிவாகும். இலங்கைத் தீவானது காலங்கா லமாக தத்தமது அரசியல் இலாபங்களுக்காக ஆட்சியாளர்களும், மக்கள் பிரதிநிதிகளும், அவர்கள் தேவைக்கேற்ப ஆட்டி வைக்கும் கைப்பாவைகளின் செயல்பாடுகளாலும் ஓர் சலனத்துடனேயே வரலாற்றை பதிவிட்டு வருகின்றது.

யுத்தம் முடிந்துவிட்டது. ஆனாலும் இன்றும் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை இருக்கிறதா என்ற சந்தேகம் அனைவருக்கும் ஏற்பட்டு கொண்டே இருக்கின்றது. கடந்த கால தமிழ் தலைவர்களது தவறுகளால் பலியிடப்பட்ட விட்டது தமிழினத்தின் ஆயுதவழிப் போராட்டம். இதன் விளைவுகளால் இன்று ஓர் நல்லிணக் கம் நாட்டில் மலர்ந்து வருகின்றது. கடந்த காலங்களில் எரிந்துகொண்டிருந்த இனப் பாகுபாடுகளும் விரோத மனப்பாங்குகளும் இப்போது அரிதாகிக் கொண்டு வருவதையும் காணமுடிகின்றது.

ஒரு கால கட்டத்தில் தமிழர்களை புலிகள் எனவும் அவர்களை தீவிரவாதத்துடன் தொடர்பு பட்டவர்களளெனவும் தென்னிலகையால் சித்தரிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் ஆட்சியாளர்கள்தான். அவர்கள் ஏன் வெறுக்கின்றோம் என்ற காரணமே இல்லாது சகோதர சிங்கள மக்கள் மனதில் தமிழர்கள் மீது ஓர் வெறுப்பு கலந்த போக்கை விதைத்து எதற்காக இனப் பிரிவினை என்றும் கூட தெரியாத வகையில் சிங்கள மக்கள் திசை திருப்பப்பட்டனர். இன்றைய சூழலில் அந்தக் கடுமையான போக்கு கொஞ்சம் கொஞ்சமாக குறையத் ஆரம்பித்துள்ளதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

உதாரணமாக சொன்னால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது போராட்டத்தின் மத்தியில் தெய்வத்திடம் தமது துயரினை முறைப்பாடாக முன்வைத்து வவு னியா கந்தசுவாமி ஆலயத்தில் அண்மையில் வழிபாடுகளை செய்திருந்தனர்.

அப்போது அங்கு இருந்த ஓர் தமிழ் நபர் உறவுகளை தேடி ஓடாய் போயிருக்கும் தாய்மார்களை இழிவுபடுத்தி பேசிய போராட்ட த்தை கொச்சைப்படுத்தியிருந்தார். அந்த சமயத்தில் அங்கிருந்த சகோதர இனத்தைச் சேர்ந்த சிங்களவர் ஒருவர் கொச்சைப் படுத்திய நபரிடம். “யார் நீங்கள் காணாமல் சென்ற உறவுகளைப்பற்றி பேச, உரிமை உள்ளதா? உங்களுக்கு என்ன தெரியும்?” “இந்த தாய்மார் களின் குறையை உங்களால் தீர்த்து வைக்க முடியுமா? அவர்களின் பிள்ளை களை மீட்டுக் கொடுக்க உங்களால் முடியுமா? முடியாது. அதனாலேயே அவர்கள் தெய்வத்தை நாடி வந்துள்ளார்கள்”என சரமாரியான கேள்விகளை கேட்டு தூற்றியவரை அவரை திட்டியுள்ளார்.

ஓர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவரின் இந்தச் செயல் வெறும் வார்த்தைக்கானதொன்றல்ல. அது ஒருவகையில் நல்லிணக்க மலர்வை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. இருந்தும் இந்த ஒரு சம்பவத்தைக் கொண்டு ஒட்டு மொத்த மக்களையும் கணித்துவிடவும் முடியாது என்பதும் சரியான வாதமே. ஆனாலும் மாற்றம் ஒன்று வந்துள்ளதை இது சுட்டி நிற்கின்றது. அதேபோல் கேப்பாப்புலவு காணி மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் மக்க ளுக்கு ஆறுதல் கூறி அவர்களுடன் புதுவருட த்தை சிங்கள மக்கள் கொண்டாடியுள்ளனர் இதுவும் ஒரு நல்லிணக்க பூ மலர்வதற்கான அடித்தளமாகும்.

இதைவிட அண்மையில் சங்கததானையில் நடந்த விபத்தில் தென்னிலங்கையை சேர்ந்த 13 சிங்கள சகோதரர்கள் மரணமடைந்தனர். குறித்த விபத்து சமயம் அவர்களுக்கு உதவிய யாழ் மக்களின் பெருந்தன்மை தென்னிலங் கையில் பெரிதாக பேசப்பட்டது. அதுமட்டும ல்லாது உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி யாழ் மக்கள் தமது மனிதாபிமா னத்தை காட்டியும் இருந்தனர். அது தென்னில ங்கை சிங்கள மக்கள் மனதில் யாழ் மக்கள் இடம் பிடிக்கும் வகையில் அமைந்துவிட்டது. நல்லிணக்கம் என்பது விலை கொடுத்து சட்டெ ன்று உருவாக்கிக் கொள்ளும் பொருளல்ல. அது விதையாக விதைக்கப்பட வேண்டிய ஒன்று. அந்த விதை இரு இன மக்களையும் தாண்டி மரணத்தை வென்று துளிர் விட வேண்டும். அதற்கு நீர் ஊற்றி பாதுகாப்பாக வளர்க்க வேண்டும் அப்போதே காலப்போக்கில் அது விருட்சமாக உருவெடுக்கும்.

எமது நாட்டின் நல்லிணக்கத்தைப் பொருத்த வரையிலும் இதே நிலை தான் காணப்ப டுகின்றது. இன்று தமிழர் மத்தியில் சிங்களவர் களும், சிங்களவர்கள் மத்தியில் தமிழரும் சகோதரத்துவத்துடனும் உணர்வு பூர்வமா கவும் வாழவே முயன்று கொண்டுவருகின் றனர். அவர்களிடம் நன்றாகவெ நல்லிணக்கம் வளர்த்தடுக்கப்பட்டு வருகின்றது. அதை அவர் கள் உறுதிப்படுத்தியும் வந்திருக்கின்றார்கள்.

ஆனால் எமது நாட்டின் அரசியலே எமது மக்களிடமுள்ள நல்லிணக்க இணைப்பை இற்றை நாள்வரை கூறுபோட்டு வந்தகொண் டிருக்கின்றது. தற்போது வளர்க்கப்பட்டுவரும் நல்லிணக்கம் என்னும் மரம் விருட்சம் பெற எமது நாட்டின் சுயலாப அரசியல் காய் நகர்த்தல் கள் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் ஆட்சியாளர்கள் இந்நாட்டின் அனைத்து மக்களுக்காகவும் உழைக்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும். இன மத பேதங்கள் மறக்கப்பட்டு நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வை அரசியல் வாதிகள் மக்களிடமிருந்த கற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த நிலையை உருவாக்க அரசியலுக்க அப்பால் சென்று அனைவரும் உழைத்தால் இலங்கைத் தீவு ஓர் சுதந்திர நாடாக மிக கூடிய விரைவில் மாற்றமடையும். இதுவே எதிர்கால த்தின் தேவையாகவும் உள்ளது.

யாழ்.இனியன்

## தாஜுதீன் கொலையில் திடீர் திருப்பம்: முக்கிய பிரமுகரின் மனைவி விரைவில் கைது?

இலங்கை அரசியலில் உள்ள முக்கிய பிரமுகரின் மனைவி விரைவில் கைதுசெய்யப் படவுள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மனைவியான ஷிரந்தி ராஜபக்ஷவே இவ்வாறுகைது செய்யப்பட வுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பிலேயே ஷிரந்தி ராஜபக்ஷ கைதுசெய் யப்படவுள்ளார். தாஜுதீனின் கொலை இடம் பெற்ற போது அலரி மாளிகையிலிருந்து 41 தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என குற்றப்புலனாய்வு பிரிவினர் இனங்கண்டுள்ளனர். குறித்த தொலைபேசி அழைப்புகள் ஷிரந்தியின் தனிப்பட்ட இலக்கத் திலிருந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளது என கண் டுபிடிக்கப்பட்டுள்ளது.


எனவே ஷிரந்தி ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படுவார் என கொழும்பு ஊடகம் ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது. பிரபல ரகர் வீரர் வசிம் தாஜுதீன் 2012ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி மர்ம முறையில் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## மேதினத்தின் பின்னர் சுதந்திரக்கட்சி என்னாகும்?..

இம்முறை மே தினக் கூட்டத்தின் பின்னர் சுதந்திரக் கட்சியில் தெளிவான ஓர் பிளவை அவதானிக்க முடியும் என அரசியல் விமர்சகர்களால் பரவலாக பெசப் பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை யிலும் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டணி கட்சிகளின் பங்களிப்புடனும் மே தினக் கூட்டம் நடத் தப்பட்டது. அப்போதெல்லாம் சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்பட்டமைக் கான அறிகுறிகள் தென்பட்டாலும், இம்முறை மே தினக் கூட்டத்துடன் அந்த பிளவு வெளிச்சமாகும் என ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கண்டியில் மே தினக் கூட்டத்தை நடத்த உள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினால் காலி முகத் திடலில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்க முடியாது, பங்கேற்கவும் மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார். சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவின் தீர்மானத்தினை உதாசீனம் செய்து எவரேனும் வேறும் கூட்டங்களில் பங்கேற்றால், அவர்கள் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எனக்கருதாது நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்து ள்ளார். இதன்காரணமாகவே பல உறுப்பினர்கள் பிரிவதற்கும் கட்சிக்குள் இருக்கும் விரிசல் வெளிவருவதற்கும் காரணமாக அமை யும்.



## மாங்காய்த்தீவ எங்கள் மங்கையரை மதிக்குமா?

ஆசிய நாடுகள் வரிசையில் தேசிய நாடாளுமன்ற அரசியலில் பெண்களின் பங்கை குறைவாக கொண்டு இலங்கை உள்ளதென சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் தெரிவித்துள்ளது. இந்த பட்டியலில் ஆப்கானிஸ்தான் இரண்டாவது இடத்தையும், பாகிஸ்தான் மூன்றாம் இடத்தையும், இந்தியா ஐந்தாம் இடத்தையும், பூட்டான் ஆறாவது இடத்தையும், மாலைதீவு ஏழாவது இடத்தையும் இலங்கை எட்டாவது இடத்தில் உள்ளன. சர்வதேச ரீதியில் நேபாளம் 48, ஆப்கானிஸ்தான் 54, பாகிஸ்தான் 70, பங்களாதேஸ் 91, இந்தியா 148, பூட்டான் 170, மாலைத்தீவு 179, இலங்கை 180 என்ற இடங்களில் உள்ளன. இதே வேளை ஐரோப்பிய ஒன்றிய தகவல்படி இலங்கையின் 2015ஆம் ஆண்டு தேர்தலின்போது பால்சமத்துவம் தொடர்பில் முக்கியத்துவம் வழங்கப்பட்டாலும், அந்த தேர்தலில் போட்டியிட்ட 6151 வேட்பாளர்களில் 556 பேர் மாத்திரமே பெண்களாக இருந்தனர் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. அத்துடன் மாகாண நிர்வாக ஆட்சிமுறையில் 4.1வீதமானோரே பெண்கள் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆச்சி மதவிலேறி குந்திய இடம் மதவாச்சி

எஸ் பொ என்ற எஸ் பொன்னுத்துரை இன்று உயிருடன் இல்லை., அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் பெற்ற அவர் அங்கு சில காலம் வாழ்ந்திருந்தார். அந்த வாழ்க்கை அவருக்கு பிடிக்கவில்லை யாக்கும். திரும்பவும் தமிழ் நாடு திரும்பி அங்கோர் சிறு அறையில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் உயிருடன் இல்லா திருப்பினும் அவரை நினைவு கூர்ந்து அவரது ஞாபகங்களையும் உங்களோடு பகிர்ந்துகொள் கின்றேன். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று எங்கும் முழங்குபவர் காசியானந்தன். உலகெல்லாம் வலம் வருவார் உலகிலுள்ள பெயர்களுக் கெல்லாம் தமிழே காரணம் என்று மேடைதோ றும் முழங்குவார்.

இராசதுரைக்கு எதிராக மேடைகளில் முழங்கி னார் காசியானந்தன். அமெரிக்காவில் உள்ள ஒரு பிரதேசம் அலஸ்கா. அந்த இடத்தின் பெயர் ஏன் உருவானது என்று மேடைகள் தோறும் கேள்விகள் கேட்பார் காசி.


உலகெல்லாம் தமிழன் வாழ்ந்தவன். ஆகவே உலகெல்லாம் தமிழ் பெயர். அலாஸ்கா என்று என் பெயர் வந்தது தெரியுமா?.. அது அலைகள் அடித்த இடம். அதுதான் அலஸ்கா என்று தமிழனே அதற்கு பெயர் சூட்டினான் என்று சூர த்தமிழில் சூளுரைத்துக் கூறுவார் காசியான ந்தன். காசியின் இந்த பேச்சைக்கேட்டவுடன் ஒன்றும் அறியாத விசிலடிச்சான் குஞ்சுகள் கை தட்டி விசிலடித்து ஆரவாரம் செய்வார்கள். ஆனாலும் அறிவு பூர்வமாக சிந்திப்பவர்கள் காசியின் இந்த கருத்துக்களை அப்போது ஏற்பதாக இல்லை.

காசியானந்தனின் பேச்சுக்கு எஸ்.பொ அவர்கள் இராசதுரையின் பிரச்சார மேடைகளின் மீதேறி விளக்கம் கொடுப்பார். எஸ்.பொவும் காசியானந் தனின் பேச்சுக்கு சளைத்தவர் அல்ல. காசியான ந்தன் பிறந்த இடம் மட்டக்களப்பில் உள்ள அமிர்தகழி. காசி அமிர்தலிங்கத்தின் விசுவாசி. இராசதுரைக்கு எதிராக அமிர்தலிங்கம் அவர்களால் பட்டிருப்பு தொகுதியில் களமிறக்கி விடப்பட்டவர். இதை மனதில் வைத்து எஸ். பொ. கூறுவார். காசியின் சொந்த இடம் அமிர்த கழி. ஏனந்த பெயர் வந்தது?.. எஸ் பொ. கேள்வி எழுப்புவார்.

அமிர்தலிங்கம் கழித்த இடம் அமிர்தகழி. ஆகவேதான் அமிர்தகழி என்று பெயர்வந்தது என்று இராசதுரையின் பிரசார மேடைகளில் காசி ஆந்தனை கிண்டல் அடித்து பேசுவார் எஸ்.பொ அறிவு சார்ந்தவர்கள் அதற்கு கை தட்டி ஆராவாரம் செய்வார்கள். எஸ். பொ. தொடர்ந்து காசியை பிண்டால் அடிப்பார். மதவாச்சி என்று ஏன் பெயர் வந்தது ஏன் தொரியுமா. ஆச்சி மதில் ஏறி குந்தியதால் வந்த பெயர்தான் மதவாச்சி என்று கர கோஷங்களுக்கு மத்தியில் எஸ்.போ. பேசுவார். ஆனாலும் இத்தனை தமிழ் முழக்க ங்களுக்கு மத்தியிலும் காசியானந்தன் தோல்வி யையே தழுவிக்கொண்டார். மட்டக்களப்பு தொகுதியில் வெற்றிபெற்ற செல்லையா இராச துரை தனது வெற்றியின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவிவிட்டார். தமிழர் விடுத லைக்கூட்டணி தனக்கு துரோகம் இழைத்து விட்டதாக கூறினார் இராசதுரை. தந்தை செல்வாவுக்கு பிறகு அடுத்த தலைவர் யார் என்ற போட்டி அமிர்தலிங்கம் அவர்களு க்கும் இராசதுரை அவர்களுக்கும் இடையில் நிலவியது.

இதில் ஒரு விடயத்தை சொல்லியே ஆக வேண்டும். தந்தை செல்வாவின் நினைவு தினம் இரு வருடங்களுக்கு முன்னர் யாழில் அனுஸ்டிக்கப்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகள் பலரும் அதில் கலந்து கொண் டனர். நீண்ட காலத்திற்கு பின்னர் திரு செல்லையா இராசதுரை அவர்களும் அதில் கலந்து கொண்டிருந்தார்,.செல்லையா இராச துரை அவர்கள் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்க தயாரானார். மாலையை தூக்கிக்கொண்டு தந்தை செல்வாவின் உருவச்சிலை நோக்கி நடக்க முயற்சித்தார் இராசதுரை. அப்போது அங்கே ரெலோ இயக்கத்தின் முக்கிய உறுப்பினரான சிவாஜிலிங்கமும் அங்கிரு ந்தார். கடுப்பாகி விட்டார் சிவாஜிலிங்கம். அடே! துரோகி!!... எங்கையடா இவ்வளவு காலமும் இருந்தாய்?.. அது ரெலோ சிவாஜிலிங்கத்தின் குரல். கூட்டத்தில் இருந்த எல்லோரும் திடுக் கிட்டு எழுந்து நின்றனர், ரெலோ சிவாஜிலிங்கம் தொடர்ந்து பேசிய கருத்து அங்கு திரண்டிருந் தோர் பலரையும் திகில வைத்தது.

இராசதுரையை திட்டிய ரெலோ சிவாஜிலிங்க த்தை அங்கிருந்து அப்புறப்படுத்த சிலர் முயன்ற னர். அப்போது ரெலோ சிவாஜிலிங்கம் ஒரு வார்த்தைசொன்னார். அடே!...இராசதுரை நீ சக்கிலியா!... இதுதான் ரெலோ சிவாஜிலிங்கம் சொன்ன அந்த வார்த்தை. அந்த கூட்டத்தில் இருந்த ஒரு பேராசிரியர் இப்படி கூறினார். இராசதுரை ஐக்கியதேசிய கட்சிக்கு மாறியது தவறுதான். ஆனாலும் அது அவரது முடிவு. அதற்காக இராசதுரையை துரோகி என்று பேசியிருக்கலாம். அரசியல் துறந்தோடி என்று தூற்றி இருக்கலாம். சாதிப்பெயர் சொல்லி சக்கிலியா என்று ரெலோ சிவாஜிலிங்கம்



சொன்னதை எப்படி ஏற்கமுடியும் என்றார். அங்கிருந்த இன்னொரு கூட்டமைப்பு பிரமுகரே மனம் நொந்து அருகில் இருந்த பேராசிரியரின் கையில் சுரண்டினார். தமிழா ஒன்று சேர் என்று நாங்கள் எல்லாம் தமிழ் தேசியம் பேசுகிறோம்.

ஆனாலும் சாதி சமூகம் என்று வந்து விட்டால் எமக்குள் இன்னமும் குறுகிய வட்டம்தான் என்று புறுபுறுத்துக்கொண்டார். இராசதுரை சிறந்த பேச்சாளர். தமிழ் மக்களின் நெஞ்சங்க ளில் சிம்மாசனம் இட்டு உட்கார்ந்தவர். ஆளுமை உள்ள தலைவர். அதற்காக அமிர்த லிங்கத்தின் மக்கள் செல்வாக்கையோ அல்லது அவரின் ஆளுமையையோ யாரும் குறைத்து மதித்துவிட முடியாது. தலைமை வெற்றிடப் போட்டியில் முந்திக்கொண்டார் அமிர்தலிங்கம். அரசியல் காய் நகர்த்தல்கள் செல்லையா இராசதுரையை ஓரங்கட்டியது. ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த இராசதுரை தமிழ் மக்களின் அபிவிருத்திக்காக உழைப்பேன் என்று அறிவித்தார். காசி ஆனந்தனின் தமிழ்ப்பற்று குறித்து இந்த இடத்தில் கொஞ்சம் சொல்லியே ஆக வேண்டும்.

"சிங்கமறத்தமிழ் வீரர்
எங்கள் செந்தமிழ் தோழர்தம்
தோள மீசை ஆணை....

இப்படி தேர்தல் காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசார மேடைகளில் பாடிய காசியானந்தன் பின்னாளில் புலிகள் இயக்க த்தில் இணைந்து பாடல்களை இயற்றினார்.

இருப்பாய் தமிழா நெருப்பாய்
இருந்தது போதும் செருப்பாய்..

என்ற புகழ்பெற்ற பாடலை எழுதி புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் மனதில் இடம்பெற்றார் காசி. இந்த பாடலை பாடியவர் தேனிசை செல்லப்பா. இதற்குள் இன்னொரு பிரச்சினை. உணர்ச்சிக்கவிஞர் காசிக்கும் தேனிசை செல்லப்பாவிற்கும் இடையில் தற்போது ஒரு முரண்பாடு. இது குறித்து பிறகு சொல்கிறேன். மேலும் பல சுவாரிசியமான தகவல்களுடன் மறுமடலில் சந்திப்போம்.

தொடரும்.....

CNR
Courier & Cargo



உங்கள் இருப்பிடத்தில் இருந்து சர்வதேச நாடுகளுக்கான ஆகாயமார்க்க,
மிகவிரைவாக பொதிகள் சேவையினை எம் ஊடாக பெற்றிடுங்கள் ..


- பெரிய சரக்கு பொதிகள்
- முக்கிய ஆவணங்கள்
- அச்சிடப்பட்ட வியாபார காகிதங்கள்
- திருமண அழைப்பிதழ்கள்
- புகைப்பட அல்பங்கள்
- உலர் மாற்றும் கடல் உணவு பொதிகள்

இவைகளுக்கான சிறந்த சேவைகளினை விசேட
விலைக்கழிவுகளுடன் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்

மேலதிக விபரங்களுக்கு...
இல. 401, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 5674145 | 077 2931062

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதைபந்தாட்டப் போட்டியும் மகிந்தவுடனான ஒப்பந்தமும்!

உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் குறித்த ஓர் அணியை எதிர்த்தாடும் எதிரணி மிக திறமையாக விளையாடுமாயின் அவ் எதிரணியை நிலைகுலைய செய்ய குறித்த அணி மிகப் பிழையான முறையில் பந்துப் பரிமாற்றங்களை செய்யும். அது ஓர் உத்தி. எதிரணி குழப்பமடையும். அது தமது நியம ஆட்டத்தில் இருந்து விலகி ஆட்ட முறைமையை சீரமைக்கும். இதற்கிடையில் குறித்த அணி அதிரடியாக கோலை போட்டு வெற்றியை தனதாக்கும். அல்லது தனதாக்க முயற்சிக்கும். தற்போதய சூழலில் அரசியல் கைதிகளை விடுவிக்கவும் நிரந்தர தீர்வு நோக்கி நகரவும் தமிழர் தரப்பிற்கு ஓர் உத்தி உண்டு.

அது என்னவென்றால் "த.தே.கூட்டமைப்பு மகிந்த ராஜபக்சவுடன் வெளிப்படையான அல்லது இரகசியமான ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டும்" என்பதே அது. நீங்கள் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ சில கசப்பான உண்மைகளை ஏற்கப் பழக வேண்டும். மகிந்த ராஜபக்ச சிங்கள மக்கள் மத்தியில் மிக செல்வாக்கு பெற்ற ஓர் பலம் பொருந்திய தலைவர். அவரை வெறுத்தாலும் அவரிற்கு வாக்கு போட்ட 450,000 குருநாகல் சிங்கள மக்களிற்காகவேனும் அவரை தமிழரான நாம் மதிக்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை.

இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்து சக்கரவர்த்தி போல வாழ்ந்த மகிந்தவின் இன்றைய நிலை கண்டு அவரை பிடிக்காத சிங்கள மக்களே அவர் மீது கழிவிரக்கம் கொள்கின்றனர். ஜனாதிபதியில் இருந்து இப்போது சாதாரண ஓர் பாராளுமன்ற உறுப்பினராக மனதளவில் புழுங்கியபடி மகிந்த உள்ளார். இது போதாதென்று அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது Financial Crimes Investigation Division- FCID ஆல் பல நீதிமன்றங்களில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன..."எப்படி இருந்த நான் இப்படி ஆகிவிட்டேனே" என்ற கடுப்பில் இருக்கும் மகிந்தவை தமிழர் தலைமை (த.தே.கூ) சரியாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

பாராளுமன்றம் கலையவும் அத்துடன் இலங்கை அரசு மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஏற்றுக்கொண்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவும் இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன. இந்த இரு வருடங்களையும் த.தே.கூ சரியாக பயன்படுத்த முடியும். அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் தமிழரின் நியாயமான அரசியல் தீர்வுக்கு உண்மையாக உதவ வேண்டும் எனவும் மிகுதியாக வடக்கில் உள்ள இராணுவ நிலைகளை அகற்ற வேண்டும் எனவும் அடுத்து மகிந்த தலைமையில் அரசு அமையுமாயின் அவ் அரசில் சில முக்கிய அமைச்சுக்களை த.தே.கூ ற்கு வழங்க வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்து மகிந்தவுடன் த.தே.கூ ஓர் வெளிப்படையாகவோ அல்லது இரகசியமாகவோ ஓர் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

இவ் ஒப்பந்தத்திற்கு விலையாக சம்பந்தன் தனது எதிர்கட்சி தலைவர் பதவியை துறந்து அதனை மகிந்தவிடம் கையளிக்க வேண்டும். சம்பந்தன் சுமந்திரன் உட்பட த.தே.கூ எம்பிக்கள் அத்தனை பேரும் "National Unity Government" என அழக்கப்படுகின்ற "தேசிய அரசாங்கத்தின் பங்காளிகளாக" மாறி ரணில் அரசாங்கத்தில் சில "அமைச்சுப் பதவிகளை" ஏற்று அடுத்த இரு வருடங்களிலாவது தமிழரிற்கு ஏதாவது உருப்படியான நல்ல காரியங்களை செய்ய வேண்டும். செய்ய முயற்சிக்க வேண்டும். அல்லது அவ்வாறு செய்ய இனிமேலாவது பழக வேண்டும்.

இடையிடையே "மானே தேனே பொன்மானே" என்பதை பாட்டில் இடையிடையே செருகுவதைப்·போல "இந்நாட்டை இரண்டாக பிரிப்பதற்கு தமிழர் ஒருபோதும் இனிமேல் இடமளியார்" என்ற உண்மைச் செய்தியையும் இவர்கள் சிங்கள மக்களிடம் அவ்வப்போது சொல்லிவர வேண்டும். தற்போது வெறும் எம்.பியாக இருக்கும் மஹிந்த எதிர்கட்சி தலைவர் பதவியை பெரும் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்வார். தன்னை எதிர்கட்சி தலைவராக மாற்றிய த.தே.கூ ற்கு நன்றிக்கடன் பட்டவராக இருக்க வேண்டிய நிலைக்கு மகிந்த தள்ளப் படுவார். ஆயிரக்கணக்கான போராளிகளை புனர்வாழ்வளித்து விடுவித்த மகிந்த எஞ்சிய அரசியல் கைதிகளை "ஒப்பந்தப்படி விடுவிக்க" தனது அரசியல் தந்திரத்தை பயன்படுத்துவார்.

தமிழர் பிரச்சனைக்கு ஓர் தீர்வை தருவதற்கான ஓர் சூழ்நிலைக் கைதியாக அவரே மாட்டுப்படுவார். இரண்டு வருடங்களில் ஆட்சி மாறினாலும் மகிந்த தமிழர் விரோதப் போக்கை எடுக்காத அளவிற்கு அரசியல் சதுரங்க "CheckMate" நிலையில் வைத்திருக்க தமிழர் தலைமை இவ்வாறு வியூகம் வகுக்க வேண்டும். த.தே.கூ ன் முட்டாள்தனமான முடிவுகளால் மகிந்த மூலமாக தமிழரின் நியாயமான அரசியல் தீர்வு தடைப்பட்டாலோ அல்லது ஆட்சி மாறி அதன்பின்னர் மகிந்தவால் தமிழர் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டாலோ அதற்கு முழுப் பொறுப்பும் த.தே.கூட்டமைப்பையே சாரும். அவர்கள் இதில் தவறினால் எதிர்காலத்தில் த.தே.கூ உம் "பொறுப்புகூற வேண்டிய நிலை" (Accountability) ஏற்படும். ஓர் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் இரு அணிகளும் சம அளவு கோல்களை போட்டிருந்தால் 5 நிமிட மேலதிக நேரம் தரப்படும். அந்நேரத்தில் நினைத்துப்பார்க்கவும் முடியாத அதிரடி ஆட்டத்தை ஆடி வெற்றிபெற வேண்டும். ஆகவேதான் கூறுகிறேன்.. இவ்வாறே அடுத்த இரண்டு வருட மேலதிக காலத்தில் த.தே.கூட்டமைப்பும் அதிரடி அரசியல் சதுரங்க ஆட்டத்தை ஆடி செய்து ரணிலையும் மகிந்தவையும் "Checkmate" நிலையில் வைத்திருந்து தமிழரை அரசியல் வெற்றிபெற செய்ய வேண்டும்.

அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை. முயற்சி உடையான் இகழ்ச்சி அடையான். என்பதும் எம் முன்னோர்கள் கூறிய வாக்குகள் அல்லவா. சிந்திப்போம் .செயற்படுவோம்.

ஸ்ரனிஸ்லஸ் செலஸ்ரின்
சட்டத்தரணி



# மக்களை வருத்தும் மண்கொள்ளை மாபியா!

யாழ்ப்பாணத்தில் மண் கல் விற்பனையில் கொடிகட்டிப் பறக்கும் ஒரு அதிகாரியை மேலதிகாரியால் கூட ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கிறது என்றால் இவருக்கு பின்னால் மேலதிகாரிக்கு மேலே யாரோ இருக்கிறார்கள் என்பது உண்மை.

மக்கள் இன்னும் மீளக்குடிமர இருக்கும் பிரதேசத்தின் செயலராக இவர் பணியாற்றுகிறார். ஆரம்ப கால வாகன இலக்கத்துக்கு முன்னால் இருக்கும் எழுத்துப் போல் இவரின் பெயருக்கு முன்னாலும் அந்த எழுத்து இருக்கிறது என்றால் இரண்டுக்கும் என்ன ஒற்றுமை பாருங்க. அதனால்த் தான் என்னவோ 2 லொறி 2 டிப்பர் கார் மோட்டார் சைக்கிள் என்று நிறைய வாகனங்களை வாங்கி தனது தந்தையின் பெயரில் வைத்திருக்கிறார் போலும். இலட்சக் கணக்கில் பணம் சம்பாதிக்கும் தனது அரச வேலை தவிர்ந்த பிறவேலைகளை தான் செய்யாமல் தனக்கு நெருங்கிய நண்பர் மூலம் செய்து வருகிறார். சுண்ணக்கல் எடுத்து விற்பது முதல் மணல் விற்பனை வரை நண்பர் மூலம் செய்து வருகிறார். அத்துடன் இவருக்கு வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு இங்கே வீட்டுத் திட்டத்தை வழங்கிய பெருமை உண்டு. தீவுப் பகுதியொன்றில் இவர் செயலாளராக இருந்த சமயம் மண் விற்கத் தொடங்கியவர் மக்களுக்கு வழங்க சேவாலங்கா கட்டிய வீட்டுக்கு மண் கல் வழங்கியது முதல் தொடர்கிறது. மண்ணெண்ணைய் விற்றவன் பெரிய ஆளாக வந்தது போல் மண் விற்றவனும் பெரிய ஆளாக வரும் ஊரிது. ஆனால் மண் விற்கத் தொடங்குபவன் ஒரு போதும் சுற்றுச் சூழல் சம்பந்தமாக சிந்தனையில்லாதவன் என்பது வெளிப்படை. இவர் அரச அதிகாரியாக வந்து பல வருடங்கள் ஓடி விட்டன. ஆனால் இவரால் ஊருக்கு ஒரு போதும் நன்மை ஏற்படவில்லை.


இடம்பெயர்ந்து மீளக்குடியேற முடியாமல் தவிர்த்துக் கொண்டிருக்கும் அந்த மக்கள் பற்றி சிறு துளியளவு கூட சிந்திக்காமல் இருப்பது மட்டுமல்ல அந்த மக்களுக்கு கிடைக்கக் கூடியவை கிடைக்காமல் போவதற்கு இவர் தான் காரணமாக இருக்கிறார். இவ்வாறு செயற்படும் இவருக்கு இடமாற்றம் வந்தும் போகாமல் இருக்கிறார். இவரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யும் அளவுக்கு இவருக்கு பெரிய மட்டத்தில் செல்வாக்கு இருக்கிறது. ஒரு அதிகாரிக்கு பெரிய மட்டத்தில் செல்வாக்கு இருப்பதற்கான தேவையென்ன என்று பார்த்தால் வாயே திறக்க மாட்டியள் அந்தளவுக்கு பெரிய மட்டத்துக்காக இவர் செயற்படுகிறார். அவர்களும் இவரை கவனித்துக் கொள்கிறார்கள். பிறகு எப்படி இவர் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற கோர்வைக்குள் நின்று செயற்படுவார்.

அத்துடன் வீதிகள் சில திருத்தப்படாமலே இவரால் பணம் எடுக்கப்பட்டள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. அதாவது இந்தப் பகுதி வீதிக்கு சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் பணத்தை எடுப்பதற்கு கையெழுத்து வைக்க மறுத்து விட்டார். இதனால் பயிற்சி தொழிநுட்ப உத்தியோகத்தரை வைத்து கையெழுத்திட்டு பணத்தை எடுத்துள்ளார் என்றும் சொல்லப்படுகின்றது. பொறுமை இழந்த இந்தப் பிரதேச மக்கள் எல்லோரும் ஒன்று கூடி இவரை இடமாற்றக் கோரி கடிதம் எழுதி கையெழுத்து வைத்து மேலதிகாரியிடம் சென்று வழங்கினர். மேலதிகாரி இவரின் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்ட வேளை ஒரு போன் கோல் மேலிடத்தில் இருந்து வந்தது இந்த அதிகாரியை மாற்றக் கூடாது. அவ்வளவு தான் தனக்கேன் இந்த வம்பு வேலையென்று மக்கள் வழங்கிய கடிதத்தை ஒரு மூலையில் வைத்துவிட்டார். மக்கள் கடிதம் வழங்கி ஒரு வருடம் கடந்து விட்டன. எந்தவித நடவடிக்கையும் மேலதிகாரி எடுக்கவில்லை. வடக்கு செயலர்களில் பலர் காணி மண் கல் விற்பனையில் இருந்து பேக்கரி வரை தொழிலில் முன்னேறி வருகின்றனர். ஆனால் தமது வேலையை செய்யாமல் இருப்பதால் தமது பிரதேசம் பின்னடைந்து செல்கிறது என்று கவலையடைவதற்கு இவர்கள் தயாரில்லை. கேட்டால் அப்பேர்து புலிகளின் நிர்வாகம் இப்போது எங்களின் நிர்வாகம் என்று கதை விடுகிறார்கள். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாத இவர்களிடம் நேர்மை இருக்கும் என்று ஒரு போதும் நம்பமுடியாது. போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இப்பொழுது இவர்களிடம் அகப்பட்டு நொந்து நூலாகிப் போகிறார்கள் என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி உலகம்

## பிரபுதேவாவின் மறு பக்கம்!



நடன இயக்குநர், நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் என பன்முகங்களை கொண்ட பிரபுதேவாவின் அடுத்த பரிமாணம் பாடலாசிரியர். தற்போது தமிழில் நடிப்புக்கு முக்கியத்துவம் அளித்து வரும் பிரபுதேவா, புதுமுக இயக்குநர் எம்.எஸ்.அர்ஜுன் இயக்கி வரும் "எங் மங் சங்" படத்தில் நடித்து வருகிறார்.

முழுக்க முழுக்க நகைச்சுவைக்கு முக்கியத்துவம் அளித்து வரும் இப்படத்தில் லட்சுமி மேனன், தங்கர்பச்சான், சித்ரா லெட்சுமணன், ஆர்.ஜே.பாலாஜி, கும்கி அஸ்வின் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். வாசன்ஸ் விவல் வென்சர்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்து வருகிறது. இப்படத்தில் இடம் பெறும் பிரத்யேக பாடல் ஒன்றை பிரபுதேவா எழுதியுள்ளார். கிராமத்துப் பின்னணியில் மண் சார்ந்த பாடலாக இது உருவாகியுள்ளது. "அய்யனாரா வந்துட்டாங்க இங்க பாரு..." எனத் தொடங்கும் இப்பாடலில், கிராமத்து திருவிழாவின் மரபுகள் பாடுபொருளாக இடம் பெற்றுள்ளது. அம்ரீஷ் இப்படத்துக்கு இசையமைத்துள்ளார். சங்கர்மகாதேவன் குரலில் இப்பாடல் பதிவாகியுள்ளது. கும்பகோணம் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் 150 நடன கலைஞர்களுடன் பிரபுதேவா, லட்சுமி மேனன் இருவரும் பங்கேற்று இப்பாடலுக்கு நடனமாடியுள்ளனர்.

## வாலு இயக்குனருடன் கைகோர்க்கும் விக்ரம்!



"இருமுகன்"படத்தைத் தொடர்ந்து கௌதம் வாசுதேவ்மேனன் இயக்கத்தில் "துருவ நட்சத்திரம்" படத்தில் நடிப்பதாக இருந்தார் விக்ரம். இதனிடையே "எனை நோக்கி பாயும் தோட்டா" படத்தின் படப்பிடிப்பில் கௌதம் பிஸியாக இருந்ததால், இடைப்பட்ட காலத்தில் வேறு ஒரு படத்தில் நடிப்பதை விரும்பினார். அப்படத்தை இயக்கும் வாய்ப்பு வாலு விஜய்சந்தருக்குக் கிடைத்தது. விக்ரம் நடிக்கும் 54-ஆவது படம் இதுவாகும். இப்படத்துக்கு பெயரிடப்படாமல் படப்பிடிப்பு நடந்து வந்தது. விக்ரம் ஜோடியாக நடிக்க ஹீரோயின்கள் பலரிடம் பேச்சுவார்த்தை நடந்து வந்தது. சாய்பல்லவி நடிப்பதாக பேசப்பட்டு வந்தது. இதில் மாற்றம் ஏற்பட்டு, அந்த வாய்ப்பை தமன்னா பெற்றார். ஒளிப்பதிவு சுகுமார். இசை தமன். கலைப்புலி எஸ்.தாணு தயாரித்து வரும் இப்படத்தின் பெயர் மற்றும் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர்ஸ் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. படத்துக்கு "ஸ்கெட்ச்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. மே மாதத்துக்குள் படத்தின் முழுப் படப்பிடிப்பையும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்படம் முடிந்ததும் துருவ நட்சத்திரம் படத்துக்காக அமெரிக்கா செல்லவுள்ளார் விக்ரம்.


## சிவகார்த்திகேயனின் ஆசைக்கு இணங்கிய நயன்தாரா!



தமிழ் சினிமாவின் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா இப்போது ரொம்ப பிஸி. அடுத்தடுத்து இப்போதே நிறைய படங்களில் கமிட்டாகி விட்டார். அண்மையில் இவரது நடிப்பில் வெளியான மாயா படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது.

தற்போது சிவகார்த்திகேயனுடன் வேலைக்காரன் என்ற படத்தில் நடித்து வருகிறார். நயன்தாராவுடன் ஒரு படத்திலாவது ஜோடியாக நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட சிவகார்த்திகேயனுக்கு இப்படம் மூலம் நிறைவேறியுள்ளதாம். நயன்தாராவிடமே தனக்கு உங்களுடன் இணைந்து நடிக்க வேண்டும் என்பது ஆசை என சிவகார்த்திகேயன் கூறியிருக்கிறாராம். இதற்கு முன் பல மேடைகளில் நயன்தாரா வுடன் டூயட் பாட வேண்டும் என்பது தனது ஆசை என கூறிய ஜெயம் ரவிக்கும் தனி ஒருவன் படம் மூலம் நிறைவேறியது குறிப்பிடத்தக்கது

## அஜித் பிறந்த நாளன்று விவேகம் பட டீசர்!



சிவா இயக்கத்தில் அஜித் நடித்து வரும் படம் "விவேகம்."இப்படத்தில் காஜல் அகர்வால், அக்ஷரா ஹாசன், விவேக் ஓபராய் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். வில்லன் வேடத்தில் பாலிவுட் நடிகர் விவேக் ஓப்ராய் நடித்து வருகிறார். இது அவர் நடிக்கும் முதல் தமிழ்ப் படம். இந்தப் படத்தை சத்யஜோதி ஃபிலிம்ஸ் தயாரித்து வருகிறது. இசை - அனிருத். இப்படத்தின் டீசர் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. வரும் மே 1-ம் திகதி அஜித் பிறந்த நாளில் டீசர் வெளியிடப் படுகிறது. இத்தகவலை தயாரிப்பு நிறுவனம் உறுதி செய்துள்ளது.

## "பாகுபலி" கற்பனை கலந்த வரலாறு - இயக்குநர் ராஜமௌலி!



"பாகுபலி" படத்துக்குக் கிடைத்த மாபெரும் வரவேற்பைத் தொடர்ந்து, "பாகுபலி 2" படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. அனுஷ்கா பாத்திரத்தின் பின்னணி என்ன? கட்டப்பா ஏன் பாகுபலியைக் கொன்றார்? உள்ளிட்ட பல கேள்விகளுக்கு பாகுபலி 2-இல் விடை தெரிய வரும் என்பதால் எதிர்பார்ப்பு ஏகத்துக்கும் எழுந்துள்ளது. செய்யாளர்கள் சந்திப்பில் இயக்குநர் ராஜமௌலி பேசும் போது... "இது ஒரு கற்பனை கலந்த வரலாற்று படம். ஆகையால் இந்த காலத்தில் தான் இக்கதை நடைபெற்றது என்று சொல்ல முடியாது. கதையை 1000 ஆண்டுகளுக்கு முன்பு நடப்பது போல வைத்துக் கொண்டோம்.

பாகுபலி கதையைத் தொடங்கும் போது என்ன எழுதினோமோ அது பாகுபலி-2 இல் முடிந்துவிடும். மகாபாரதம் மிகவும் பெரியது. அதை எப்போது படமாக்குவேன் என தெரியவில்லை. அது குறித்த எதிர்பார்ப்பை பெருக்க வேண்டாம். பாகுபலியை பொருத்தவரை, இது இரண்டாம் பாகம் என எடுத்துக் கொள்ள கூடாது. ஒரு பெரிய கதையை 2 பாகங்களாக கொடுக்கிறோம் அவ்வளவுதான்"" என்றார் ராஜமௌலி.

## அஜித்தால் விக்ரமிற்கு கிடைத்த மிகப்பெரும் வாய்ப்பு!

அஜித் தனக்கு எது சரி என்று படுகின்றதோ அதை தான் செய்வார். அந்த வகையில் இவர் நடிப்பில் செம்ம ஹிட் அடித்த காதல் மன்னன், அமர்க்களம் இயக்குனர் சரணுக்கு மற்றொரு வாய்ப்பு கொடுக்கலாம் என்று நினைத்தார். இவை அட்டகாசம் படத்திற்கு முன்பு நடந்த கதை, சரணும் செம்ம மாஸ் கதையை அஜித்திடம் கொடுக்க, அஜித் உடனே ஓகே சொல்லிவிட்டார். இப்படம் சென்னை லோக்கல் டான்களை மையமாக கொண்டு எடுக்கப்படவிருந்தது, படத்திற்கு ஏறுமுகம் என்று டைட்டில் வைத்தனர். இப்பட த்தின் போஸ்டர் எல்லாம் பத்திரிக்கைகளில் வந்து அந்த படம் ஒரு கட்டத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக ட்ராப் ஆனது. பிறகு அந்த படம் விக்ரம் கைக்கு வர, படம் வெளியாகி மாஸ் ஹிட்டாகி, விக்ரம் திரைப்பயணத்தையே அடுத்த லெவலுக்கு கொண்டு சென்றது, அந்த படத்தின் பெயர் தான் ஜெமினி.

## விஜய்க்கு தொடரும் தலைவலி!



இளைய தளபதி விஜய் தற்போது அட்லீ இயக்கத்தில் பிஸியாக நடித்து வருகின்றார். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தான் ராஜஸ் தானில் முடிந்தது. தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் நடந்து வருகின்றது.

இதில் விஜய்க்கு மூன்று கெட்டப் என்பது அனைவரும் அறிந்ததே. படத்தின் படப்பிடிப்பு புகைப்படங்கள் தொடர்ந்து லீக் ஆகி வருவது படக்குழு ஏற்கனவே வருத்தம் தெரிவித்தது.

யாரும் இதை செய்ய வேண்டாம் என கோரிக்கை வைத்தது, ஆனால், விஜய்யை பார்க்கும் ஆர்வத்தில் ரசிகர்கள் ஒரு சிலர் புகைப்படங்கள் எடுத்து வெளியிட்டு வருகின்றனர். இவை பலருக்கும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது, சமீபத்தில் விஜய்யின் புதிய தோற்றம் வெளிவந்தது படக்குழுவை அப்செட் ஆக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் எஸ் துரைசிங்கம் வழங்கும் செவ்வி....

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு இயற்கை அளித்த மிகப்பெரும் கொடை பனை வளம். அதனை அபிவிருத்தி செய்தால், நாம் யாரிலும் தங்கி வாழவோ அல்லது யாருக்கும் அடிபணிந்து வாழவோ வேண்டிய அவசியம் இருக்கப் போவதும் இல்லை.

ஆனாலும் யுத்த காலங்களில் மக்கள் எதிர்கொண்ட அழிவுகளைப்போல அதிகம் பாதிக்கப்பட்ட தாவரம் பனைவளம்தான். பதுங்கு குழிகளையும், காப்பரண் களையும் அமைப்பதற்கு வெட்டி வீழ்த்தியதாலும், எறிகணை வீச்சுகளாலும் ஏறத்தாழ 4.5 மில்லியன் பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்ப ட்டுள்ளது.

இத்தகைய வரலாற்றைக்கொண்ட பனை வளதத்தின் மூலம் பெற்றுக்கொடக்கப்படும் நன்மைகள் பற்றி கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டறவுச் சங்க பொது முகாமையாளர் எஸ் துரைசிங்கம் அவர்களது கருத்தக்களை இங்கு பதிவிடுகின்றோம்...

**கேள்வி:- கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது, அதனுடைய தோற்றம் பற்றி கூறுங்கள்?**

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 45 வருடங்களிற்கு முன்னர் அதாவது கடந்த 1972ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இச்சங்கம் அப்போது அமரர் மாசிலாமணி அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டு பின்நாளில் பல தலைவர்கள் பல பொதுமுகாமையாளர்கள் இச்சங்கத்தை நிர்வகித்து வந்தனர் கடந்த இடப்பெயர்விற்கு பின்னர் 2011ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்று இன்றுவரைக்கும் இச்சங்கத்தை பொறுப்பேற்று நடத்தி வருகின்றேன்.

**கேள்வி:- பனை தென்னை வள தொழிற்துறை தற்போது எத்தகைய முன்னேற்றத்தை எட்டியுள்ளது? எத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.?**

பதில் :- கடந்த காலங்களில் இந்த தொழிலை நம்பி வாழ்ந்த சாதாரண இத்தொழிலாளர்கள் விபத்தின்போதும் மரணமடைகின்ற சந்தர்ப்பங்களிலும் சரி விபத்தின்போது அங்கவீனமான சந்தர்பங்களிலும் சரி இந்த தொழிலாளர்கள் கைவிடப்பட்டநிலையில் அனாதரவாக அவர்களின் குடும்பங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் பாதிப்புக்குள்ளாகி சொல்லொண்ணாத் துயரங்களிற்கு மத்தியில் வாழ்ந்து வந்தனர். ஆனால் தற்போது இச்சங்கத்தில் அவர்களுக் கான காப்புறுதித்திட்டங்கள் தொடக்கம் கல்வி வளர்ச்சிக்காகவும் சமூக வளர்ச்சிக்காவும் சங்கத்தில் பாரிய திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். அந்தவகையில் எமது சங்கத்தின் மூத்த அங்கத்தவர் D-08 உருத்திரபுரத்தில் ஒருவர் 40அடி உயர மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமானார். அதேபோன்று முரசுமோட்டை பகுதியில் ஒரு அங்கத்தவர் மரத்தில் இருந்து இறங்கி வந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இந்த இருவருக்கும் மரணக்கொடையாக மரத்தில் இருந்து விழுந்து இறந்தவருக்கு பதினைந்து இலட்சம் ரூபாவும், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவருக்கு பத்து இலட்சம் ரூபாவீதமும் வழங்கி அந்த அங்கத்தவர்களை நம்பி வாழ்ந்த அந்த குடும்பங்கள் இன்று மிகவும் சந்தோசமாகவும் நின்மதியாகவும் வாழக்கூடிய ஒருவழி வகைகளை நாங்கள் செய்துள்ளோம்.

அதுபோல பல்வேறு திட்டங்கள் அவர்களுக்காக நாங்கள் செயற்படுத்தி வருகின்றோம். இத்திட்டங்கள் ஏற்கனவே சமாசங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தி வந்திருந்தாலும் அவர்கள் இந்த அங்கத்தவர்களுக்கு போய்ச்சேரக்கூடிய அளவிற்கு நிதிஉதவிகளை செய்யாது வெறுமனே ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் என வழங்கியதால் அவர்களுடைய இறப்பிற்கு அவர்ளுடைய இறப்பின் செலவிற்கே போதுமானதாக இருக்கவில்லை. எனவேதான் நாங்கள் அவர்களின் உற்பத்தியில் இருந்து கணிசமான ஒரு தொகையை அறவிட்டு அதற்கு சமனான தொகையை சங்கமும் வழங்கி நாங்களே அத்திட்டத்தை செய்து வந்துள்ளோம்.

**கேள்வி:-இந்த தொழிலை மேலும் மேம்படுத்துவதற்கு நவீன மயப்படுத்துவதற்கும் உங்கள் சங்கம் என்ன மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.**

பதில் :- உண்மையில் பனை அபிவிருத்திச்சபை மிசினெறிகளை கொண்டுவந்து அவர்களுடைய தொழிலிற்கு வழுங்கி நவீன முறையில் அவர்களின் உற்பத்திக்கு எந்தவிதபாதிப்பும் ஏற்படாத வகையில் பயன்படுத்துவதற்கு முயற்சித்தாலும் அந்த மிசிநெறிகளை கொண்டு தொழிற்செய்வதற்கான முறையை அவர்கள் கையாள்வதில் தயாராக இல்லை. காரணம் அது அவர்களிற்கு மிகவும் கடினமாக இருக்கின்றது

எனவே, அவர்கள் தங்களின் கடந்த காலசெயற்பாடு மூலமே அத்தொழிலை செய்து வருகின்றனர். அவர்களின் தொழிலை மேம்படுத்தகூடிய வகையில் மிகவும் அவதானமாக தொழிற்படுவதற்கான பயிற்சிகளையும் அவர்களிற்கான சகல விதமான உதவிகளையும் உதாரணமாக கடன் தொகைகளையும் அவர்களின் தொழிலுக்கேற்ற ஏனைய உபகரணங்களையும் நாங்கள் வழங்கிவருகின்றோம். அதே நேரத்தில் அவர்களின் தொழிற்சார்ந்த உற்பத்திக்கான பெறுமதிகளையும் நாங்கள் அதிகரித்து வழங்கி வருகின்றோம். இதனால் அவர்களின் பொருளாதாரம் இன்று மேலோங்கி இருக்கின்றது. ஒவ்வொரு அங்கத்தவர்களின் பிள்ளைகளும் கல்வியில் நாட்டம் கொள்ளவேண்டும் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கான கல்விக்கான உதவித்திட்டங்களை நாங்கள் அறிமுகப்படுத்தி நிதி உதவிகளை செய்து வருகின்றோம்.

**கேள்வி:- பனை வெல்ல உற்பத்தி என்பதை பற்றி சொல்லுங்கள்..**

பதில் :- உண்மையில் பனை வெல்லம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகத்தான் இருக்கின்றது கடந்த காலங்களில் வருடாவருடம் சுமார் 20 ஆயிரம் கிலோ வெல்லங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை அதனை தொடர்ந்து செய்ய முடியாத ஒரு சூழல் இருந்தாலும் கடந்த 2012ஆம் ஆண்டு அரசாங்க அதிபர் மதிப்பிற்குரிய திருமதி றூபவதி கேதீஸ்வரன் அவர்களின் ஊடாக **UNDP** நிறுவனம் எமக்கு சுமார் 12.5 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கி பாரிய அளவு வெல்லத்தொழிற்சாலை ஒன்றினை கண்டாவளை சந்தியில் அமைந்துள்ள காணி யில் உருவாக்கி பெரிய அளவில் வெல்லங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தோம் கடந்த சில வருடங்களாக மக்கள் மத்தியில் பாரிய அளவில் சுகர் என்கின்ற வருத்தம் எல்லா மக்களையும் பாதிக்கக்கூடியவிற்கு ஒரு தொற்று வியாதியாக உருவெடுத்த வகையில், அனைத்து மக்களும் இந்த பனை வெல்லத்தை நாடி நிற்கின்றனர்.

எனவே நாங்கள் கடந்த வருடமும் அதிகூடியளவு வெல்லத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளோம் இந்தவருடமும் 30ஆயிரம் கிலோ வெல்லம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம் எனவே, இந்தவருடம் பனை வெல்ல உற்பத்தி என்பது ஒவ்வொரு மக்களினுடைய தேவைப்பட்டிற்கும் சென்றடைய வேண்டும் என்ற வகையில் நாங்கள் அதனை முன்னெடுத்துள்ளோம்.

**கேள்வி:- பொதுமுகாமையாளர் அவர்களே ப.தெ.வ.தொழிற்காப்புறுதி மற்றும் இழப்பீடு தொடர்பில் கூறமடியுமா?**

பதில் :- பனை தென்னை வ.அ.கூ.சங்கத்தின் தொழில்புரிகின்ற அங்கத்தவர்களிற்கு சங்கத்தின் ஊடாக நாங்கள் ஏனைய காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதிகளை ஒருசேர்க்க செய்திருந்தாலும் எங்கள் சங்கத்தின் ஊடாக அவர்களிற்கான விபத்து காப்புறுதி ஒன்றை நாங்கள் செய்திருக்கின்றோம்.

அதே நேரத்தில் சங்க நிதியில் இருந்தும் அவர்களுக்கு விபத்து உதவுதொகை திட்டம் ஆரம்பித்துள்ளோம். தொழில் புரிகின்றபோது மரத்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் மரணம் அடைந்தால் அவரின் குடும்பத்திற்கு 15 இலட்சம் ரூபாய்களை நாங்கள் வழங்கியிருக்கின்றோம். அதே நேரத்தில் தொழில் ரிதியாக ஏதேனும் வகையில் விபத்து நடந்து அவர் மரணம் மடைந்தால் அவரிற்கு பத்து இலட்சம் ரூபாவும் தொழில்புரிகின்றபோது இயற்கையாகவே அவர் நோய்வாய்ப்பட்டு மரணம் அடைந்தால் ஐந்து இலட்சம் ரூபாய்களையும் இது அவர்களுடைய தொழிற்பங்களிப்பிற்கு ஏற்ப அல்ல உற்பத்திக்கு ஏற்ப அவர் 10 போத்தல் கொடுத்தால் என்ன 100 போத்தல் கொடுத்தால் என்ன அல்லது அவருடை பங்களிப்பு 1500.00 ரூபாவிற்கு மேற்பட அவரின் பங்களிற்பு இருந்தால், அவரிற்கான இந்த காப்புறுதிதிட்டத்தில் அதற்கான நிதி வழங்கப்படும் சமாசத்தினை பொறுத்தளவில் ஒரு அங்கத்தவரின் பங்களிப்பின் வீதத்திற்கு ஏற்பவே, மரணக்கொடையாக இருந்தாலும் சரி பென்சனாக இருந்தாலும் சரி வழங்கப்படும்.

ஆனால், எங்களைப் பொறுத்தளவில் அவரினுடைய விபத்து நிதிக்காக சேர்க்கப்படும் ஒரு தொகையின் 10வீதத்தை அவர் 60வயது கடந்ததும் உதாரணமாக 500000.00 அவரின் விபத்து நிதி இருந்தால் அதன் 10வீதம் மாதாந்தம் 50000.00 ரூபா பென்சனாக எடுக்கக்கூடிய திட்டத்தை நாங்கள் செய்துள்ளோம். அவர் உயிர் வாழும் வரைக்கும் அவர் தவறுதலாக இறந்தால் அவரின் மனைவி பிள்ளைகளோ அவரின் பென்சனை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு மாதிரியான திட்டத்தை நாங்கள் வகுத்துள்ளோம்.

**கேள்வி:- கூட்டுறவுச் சங்கங்களின் நிதி மற்றும் ஊழியர் பலம்போன்றவை பனை தென்னைள சங்கங்களுக்கு அதிகம் உண்டு இது எப்படி?**

பதில் :- உண்மையில் எல்லோராலும் பேசப்படுவது ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் ஒரு பணக்கார சங்கங்கள் என்று உண்மையில் நிறைய எல்லோரும் அதனை விளங்கிக்கொள்வதாக இல்லை. அங்கே அங்கத்தவர்களுக்கான சேமம் அவர்கள் நாளாந்தம் கொடுக்கின்ற உற்பத்திக்கு ஒவ்வொரு சங்கம் ஒவ்வொரு விதமாக சேமமத்தை பிடிக்கின்றது நாங்கள் ஒருவர் ஒருபோத்தல் கள் வழங்குகின்றபோது 05.00 ரூபா அவரின் சம்பளத்தில் இருந்து அறவிட்டு சங்கம் 05.00 ரூபா சேர்த்து ஒருபோத்தலுக்கு 10.00 ரூபாவாக சேமம் சேமிக்கப்படுகின்றது. உதாரணமாக ஒருவர் ஒருநாளைக்கு 100 போத்தல் கொடுப்பாராக இருந்தால் ஒரு நாளைக்கு அவருக்கு 100போத்தலுக்கும் 10.00 வீதம் 1000.00ரூபா சேமமாக சேமிக்கப்படுகின்றது எனவே, இந்த நிதிகளை வங்கியில் கொண்டே நாங்கள் வைக்கின்ற படியால் அது பலகோடிகளாக வைப்பில் இருக்கின்றமையினை அனைவரும் பார்த்துவிட்டு சங்கத்தின்நிதி சங்க இலாபநிதி எனக்கருதி ப.தெ.வ.அ.சங்கங்கள் பாரிய ஒரு நிதி வல்லமையுடன் இயங்குவதாக கருதுகின்றனர். உண்மையில் அது இலாபத்தில் ஈட்டப்படும் நிதியல்ல ஒவ்வொரு அங்கத்தவர்களுடைய நிதியையும் நாங்கள் வங்கியில் நிரந்தர வைப்பில் வைத்துள்ளோம். அதுதான் எங்களிற்கு பாரிய நிதியாக இருக்கின்றது.

**கேள்வி:- உங்கள் சங்கத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் சமூக சேவைகள் பற்றி சொல்லுங்கள்.**

பதில் :- எமது ஏனைய சங்கங்கள் சிலவற்றை செய்தாலும் கிளிநொச்சியை பொறுத்தளவில் கிளி.ப.தெ.வ.அ.கூ.சங்கமானது ஒவ்வொரு வருடமும் ஆகக்குறைந்தது பத்து இலட்சம் ரூபாவிற்கு மேலதிகமாக வழங்கிவருகின்றோம். அன்பளிப்புக்களாக இருக்காலாம் அல்லது சமூக சேவைகளைப் பொறுத்தளவில் பாரியளவில் நோய்த்தாக்கங்களிற்கு உள்ளான அங்கத்தவர்களின் பிள்ளைகள் மாத்திரம் அல்லாமல் ஏனைய தரப்பில் உதாரணமாக அண்மையில் ஒரு பாடசாலை மாணவனுக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியை வழங்கி இருந்தோம். புதுமுறிப்பைச் சேர்ந்த ஒரு 11 வயது மதிக்கத்தக்க மாணவன் விழுந்ததில் தலையில் அடிபட்டு அக்காயத்தை சத்திரசிகிச்சை செய்வதற்கு 11 இலட்சம் தேவையென குறிப்பிட்டபோது எமது சங்கத்தால் 01 இலட்சம் வழங்கி அவர்களிற்கு அந்த காசை வழங்கியபோது பலர் முன்வந்து அவர்களிற்கு பல இலட்சம் ரூபாய்களை வழங்கி இன்று அந்தமாணவர் உயிர் பிழைக்க முடியாமல் இருந்துந்தபோது உயிர் பிழைத்துள் ளான். இதுபோல பல விதமான உதவிகளை நாங்கள் செய்து வருகின்றோம்.

பாலர் பாடசாலை நடத்துவதற்கு ஆசியர்களுக்கு நாங்கள் சம்பளம் வழங்கி வருகின்றோம். மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் கலாசாரவிழாவிற்கும், மாவட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கும் உதவி புரிகின்றோம். பிரதேச செயலகங்களினுடைய கலாச்சாரவிழாவிற்கும் அவர்களினுடைய விளையாட்டு நிகழ்விற்கும் பாரியளவிலான நிதிபங்களிப்பு செய்து வருகின்றோம். எமது மாவடத்திலுள்ள அனேக பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்விற்கும் பரிசளிப்புக்கும் நாங்கள் நிதி வழங்கி வருகின்றோம்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் நாங்கள் நிதி வழங்கி வருகின்றோம். இது போல எங்களுடைய அங்கத்தவர் சமூகம்சார்ந்த பிள்ளைகளுக்கும் நாங்கள் அண்மையில் 100 புள்ளிகளுக்கு மேல் அதாவது ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்டைசயில் 100 புள்ளிகளுக்குமேல் பெற்ற 18 மாணவர்களுக்கு 2015, 2016ம் ஆண்டிற்கு மாதாந்தம் 1500.00 வீதம் வழங்குவதற்கான ஏற்பாடு செய்து ஐந்தாயிரம் ரூபாவீதம் வழங்கியுள்ளோம். ஒவ்வொரு மாதமும் 1500.00ரூபா அவர்கள் க.பொ.த.சாத ரணம் படிக்கும் வரைக்கும் இப்பணம் வழங்கப்படும். அதேபோன்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் க.பொ.சா.தரம் சித்திபெற்று க.பொ.உ.தரம் செல்கின்றபோது, 2000.00ரூபா மாதாந்தம் வழங்கி வருகின்றோம். அதே போன்று க.பொ.த.உ.தரம் சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களிற்கு மாதாந்தம் 3500.00 ரூபாப்படி நாங்கள் வழங்கி வருகின்றோம். இது அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக சங்கத்தின் இலாபத்தில் இருந்தும் அங்கத்தவர்களின் நிதியில் இருந்தும் அறவிட்டு அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக இந்த நிதியில் இருந்து நாங்கள் வழங்கி வருகின்றோம். இப்படி பல விதமான உதவித் திட்டங்களை எங்கள் சங்கம் செய்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹிந்தர்-சம்பந்தர் இரகசிய...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களை சந்தித்து பேசப்போவதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பகிரங்கமாக அறிவித்திருந்தார். ஆனாலும் மகிந்தரும் சம்பந்தரும் இரகசியமாக தொலைபேசியில் உரையாடிக்கொண்டதாக தகவல் ஒன்று வெளியாகி உள்ளது. என்ன கூறினார் மகிந்தர்?

தனது ஆட்சியின் போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தடைகள் இருந்திருக்காது என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. இதேவேளை அரசியல் தீர்வை வழங்கத்தான் தயாராக இருப்பதாகவும் அதற்கு தற்போதைய ஆட்சியை மாற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ச சம்பந்தரிடம் கோரியுள்ளதாக நம்பப்படுகிறது. சம்பந்தரின் பதில் என்ன?

தமது முடிவு இராஜதந்திர நகர்வுகளை கொண்டதாகவே இருக்கும் என்றும் அரசியலில் யாரும் நண்பர்களும் இல்லை பகைவர்களும் இல்லை என்றும் சம்பந்தர் இது குறித்து தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. இதேவேளை நேரடிச்சந்திப்பின் போது தாம் மகிந்தருடன் விரிவாக பேசலாம் என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தக்க தருணத்தில் தகுந்த முடிவுகளை எடுக்கும் என்றும் சம்பந்தர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

செய்தியாளர்

## ஆழக்கடலெங்கும் காலத்தடை...

மேலும் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான பாதுகாப்பு ரீதியலான உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வது குறித்தும் இந்து சமூத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. காலம் காலமாக இந்து சமூத்திரத்தின் பாதுகாப்பும் அமைதியும் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்ததாக தெரிவித்திருந்த பிரதமர் இதனாலேயே இந்து சமூத்திர பிராந்திய நாடுகளையும் இந்து சமுத்திரத்தை பயன்படுத்தி வரும் நாடுகளையும் இணைத்து புதிய கூட்டமைப்பொன்றை அமைக்க இலங்கை திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கான முதலாவது மாநாட்டை அடுத்த ஆண்டு நடத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இந்த நடவடிக்கைகளை வரவேற்ற ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் எனினும் இந்த நடவடிக்கைகள் பொதுவான கோட்பாட்டின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இந்த இலக்கை அடைவதற்கு இலங்கைக்கு தேவை யான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார். இந்த புதிய கூட்டமைப்பு அண்டைய நாடுகள் இலங்கை மீது செலுத்திவரும் ஆதிக்கத்திற்கு சவாலானதாக அமையவும் வாய்ப்புள்ளது. அத்துடன் இத்தகைய கூட்டமைப்பால் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு மேம்படவும் வாய்ப்புள்ளது. எனவே இத்திட்டம் தடைகளை தாண்டி வெற்றியளிக்குமா என்பதை பொறுத்திருந்தான் பார்க்கவேண்டும்.

## யாழ். புகையிரத நிலையத்தில்...

வடக்கிற்கும் தெற்கிற்கும் மீண்டும் ஒரு இணைப்பு பாலத்தை உருவாக்கி கொடுத்ததும் இந்த புகையிரதம் தான். இதற்கு சொந்தக்கா ரர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபஷ வும் அன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவும் தான் என்பதை என்றும் வரலாறு மறக்காது.

இந்திய அரசின் உதவியுடன் துரித கதியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வடக்கின் எல்லைவரை கொண்டுசென்று வடபகுதிக்கான போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டதும் மக்கள் பட்ட சந்தோஷம் சொல்லிலடங்காது. ஆனாலும் இந்த வரலாற்று சிறப்புமிக்க இந்த யாழ் புகையிரத நிலையத்தில் தற்போது அடிப்படை வசதிகளில் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுவதாக பேசப்படுகின்றது. குறிப்பாக மலசல கூடங்கள் முதல் அதிகாரிகளின் அலுவலகங்கள் வரை இந்த குறைபாடுகளை காணமுடிகின்றது.

சுற்றிவர கொங்கிறீற் சுவர்களாலும் இடையிடையே கண்ணாடிகளாலும் அமைக்கப் பட்டுள்ள இந்த புகையிரத நிலையத்தின் அலுவலக அறைகளில் அதிக வெப்பம் காணப்படுகின்றது. குளிரூட்டிகளோ அன்றி அதற்கான இதர ஏற்பாடுகள் என எதுவும் இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இதனால் இங்கு பணி புரியும் சாதாரண ஊழியர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை வெப்பத்தின் தாக்கத்தை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் தமது குறித்த பிரச்சி னையை நிவர்த்தி செய்துதரும்படி அதிகரிகளிடம் முறையிட்டும் அது பெற்றுக்கொடுக்கப் படவில்லை என்றும் புகையிரத நிலைய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அந்த புகையிரத நிலையத்திற்கு, தமக்கான உடனடி தேவைப்பாடுகள் பலவற்றை அன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரி தாம் பெற்றுக்கொண்டதாகவும் ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்போதைய அமைச் சரோ அன்றி கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ தமது தேவைகளை திரும் பிக் கூட பார்ப்பதில்லை எனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். வடபகுதியின் போக்குவரத்தில் முக்கிய தளமாக இந்த புகையிரத நிலையம் விளங்குவதால் இதனை சீர்செய்ய வேண்டியது மிகவும் அவசியமானது. புகை யிரத நிலைய அதிகாரிகளே... துறைசார் அமைச்சரே. இது உங்களின் கவனத்திற்கு.

யாழ்.இனியன்

## அங்கஜனின் அரசியல்...

தாரிகளைச் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டமை முற்றுமுழுதாக ஒரு கண் துடைப்பு அரசியல் நாடகம் என்றும் வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக வடமாகாண பட்டதாரிகள் தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத் செயலாளர் மனுல பெரேரா போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பட்டதரிகளை நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது தமது நியமனம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரின் உறுதியான வாக்குறுதி எழுத்துமூலம் தரப்பட்டால் மாத்திரமே தாம் போராட்டத்தை கைவிடுவோம் என வாடமாகாண பட்டதாரிக்கள் தெரிவித்து ள்ளனர். இதுவரை தாம் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்ட போதிலும் எந்தவொரு தரப்பும் தமக்கான சரியான தீர்வைப் பெற்றுத்தரவில்லை என்றும் வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இயேசுவே முதல்வர் விக்கி...

இன்றும் கடவுளாக வணங்குகிறபோது பிறேமானந்த சுவாமியை கடவுளாக வணங்குவதில் என்ன தவறு என வடக்கு மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் யேசுநாதர் மீது பரபரப்பு குற்றச்சாட்டொன்றை சுமத்தியுள்ளார். தினப்புயல் ஊடக நிறுவனத்திற்கு வடமாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் வழங்கிய பேட்டி ஒன்றின் போதே இவ்வாறு யேசுநாதரை பகிரங்கமாக குற்றவாளியென விமர்சித்துள்ளார்.

தொடர்ந்தம் அவர் தெரிவித்ததாவது 9 சிறுமிகளை கற்பழித்து கொலை செய்த குற்றச்சாட்டில் பாலியல் வழக்கு தொடரப்பட்ட பிறேமானந்த சுவாமியை நீங்கள் குருநாதராக எவ்வாறு ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு, 2000 ஆண்டுகளுக்கு முன்னர் மரணதண்டனை வழங்கப்பட்ட யேசுநாதரை கிறிஸ்தவ மக்கள் கடவுளாக இன்றும் வணங்கும்போது பாலியல் கொலை வழக்கில் ஒன்பது சிறுமிகளை கற்பழித்து கொலை செய்த பிறேமனந்த சுவாமியும் கடவுளாக மனிதர்கள் வணங்கு வதில் தவறில்லை எனவும் நிறுவியுள்ளார். கத்தோலிக்க மக்களின் இறை தந்தையான இயேசு கிறிஸ்துவை, பாலியல் குற்றவாளியான பிறேமனந்த சுவாமியுடன் ஒப்பிட்டு ஊடகம் ஒன்றுக்கு கருத்துக்கு தெரிவித்திருக்கும் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நியாயப்பாடானது இறை தந்தை இயேசு கிறிஸ்துவை போற்றிவணங்கும் ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களையும் இழிவுபடுத்தியுள்ளதுடன் சிறுவர்களை பாலியல் துஸ்பிரயோகம் செய்தவ ர்களுக்கு சமூகத்தில் அந்தஸ்துக் கொடுக்கும் செயலாகவும் அமைந்துள்ளது.

இந்நிலையில் கிறிஸ்தவ அமைப்புக்கள் முதலமைச்சர மன்னிபபு கோரவேண்டும் என கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இந்த சர்ச்சையை அடுத்து முதல்வர் விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றை விடுத்து கிறிஸ்தவ மக்களை முட்டாளாக்க முயற்சித்துள்ளார். அதாவதுரு செவ்வி எடுத்தவர், குற்றவாளியாகக் காணப் பட்ட ஒருவரை நீங்கள் எப்படி உங்கள் குருவாக ஏற்கலாம். நீங்கள் ஒரு நீதியரசர் தற்போது முதலமைச்சர். இது தவறானதல்லவா என்று கேட்டார். அதற்கு நான் குற்றவாளி எனக் காணப்பட்டு சிலுவையில் அறைந்த ஒருவரை 2000 வருடமாக மக்கள் தெய்வமாகக் கொண்டாடுகின்றார்கள் அல்லவா என்றேன் என பதிலளித்ததாக தெரிவித்தள்ளார்.

அதைத்தான் இயேசுவையும் பிரேமானந்த சுவாமியையும் முதலமைச்சர் ஒப்பிட்டு விட்டார் என்று சிலர் கூறி எனக்கெதிராக கிறீஸ்தவ சகோதரர்களை ஏற்றி விட எத்தனித்து ள்ளார்கள். அத்துடன் நான் இயேசு கிறிஸ்து வின் வாழ்க்கையையும் சுவாமி பிரேமாநந் தரின் வாழ்க்கையும் எந்த விதத்திலும் ஒப்பிட்டு பேசவில்லை. குற்றவாளியொருவரை எவ்வாறு குருவாக ஏற்கலாம் என்பதற்கு யேசு கிறீஸ்துவை உதாரணமாகக் கூறினேன் என தனது சட்ட வல்லமையூடாக நிறுவி கிறிஸ்தவ மக்களை முட்டாளாக்க முயற்சித்துள்ளார் முதல்வர் விக்னேஸ்வரன்.

பொய் கூறுதல் பஞ்சமாபாதகங்களில் ஒன்று. முதல்வர் விக்கியர் இயேசு பிரான் குறித்து கூறிய கருத்துக்கள் இன்னமும் காணொளியில் உண்டு. இருந்தும் முழுப்பூசணிக்காயை அவர் சோற்றில் மறைப்பது பஞ்சமாபாதகம் அல்லவே?

## குப்பை மேட்டால் சரிந்த...

அத்துடன் இந்த விபத்து இடம்பெறுவதற்கு முன்னர் குறித்த இடத்திற்கு மாற்று இடத்தை அடையாளம் கண்டிருந்தோம். இடமாற்றம் செய்வதற்கும் முடிவெடுத்திருந்தோம். எனினும் அப்பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். அதுமட்டுமன்றி மதத் தலைவர்களும் எதிர்ப்பை வெளியிட்டனர். சில இடங்களில் நாங்கள் நீதிமன்ற உத்தரவையும் பெற்றோம். குப்பை பிரச்சினையானது அனைத்து நாடுகளிலும் நிலவுகிறது. நாங்கள் அதற்கு தீர்வுகளைத் தேடி கொண்டுவர முயற்சிகின்றோம். அனர்த்தத்திற்கு முகங்கொடுத்திருக்கும் மக்களின் உயிரைப் பாதுகாப்பதே எமது முதற்கட்ட கடமையாகும் என்றும் தெரிவித்து ள்ளார்.

இந்த அனர்த்தத்தால் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகளும் உடமையிழப்புகளும் எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும். பாதிக்கப்பட்ட மக்களது தேவைகள் உடனடியாக நிறைவு செய்து கொடக்கப்படவதுடன் அதற்கான மயற்சிகளை பெதமின்றி மேற் கொள்ள வேண்டும் என்பதும் காலத்தின் அவசியமாகும். ஆனால் இலங்கையின் வடப குதியில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது இலட்சக்கணக்கான மக்கள் பலி கொள்ளப் பட்டதுடன் அவர்களது வாழ்விட ங்களும் உடல் அவயவங்களும் இழக்கப்பட்டி ருந்ததை உலகமே அறியும்.

அத்தகைய உயிர் உடமை இழப்புகளை சந்தித்த தமிழ் மக்களிடம் கடந்த அரசும் சரி இன்றைய நல்லாட்சி அரசும் சரி ஒரு பகட்டுக் காகவேனும் மன்னிப்பும் கோரியிருக்கவி ல்லை. இந்த நிலையில் தென்னிலங்கை மக்க ளின் பாதிப்பக்காக மன்னிப்பு கோரிய அரசு இதுவரையான காலப்பகுதியில் தமிழரிடம் கேட்காதது ஏன் என்ற கேள்விக்குரியதொன்றே.

யாழ்.இனியன்

## மறுபடியும் பொய்யுரைக்கிறார்...

அத்துடன் எமக்கு பதவி விலகுவது என்பது புதிய விடயமல்ல. இதனை ஜே.ஆர்.ஜெயவர்தன ஆட்சி காலத்திலேயே செய்து காட்டியுள்ளோம். எதிர்க்கட்சி தலைவரும் இதனையே கூறியுள்ளார். பதவி விலகுவதன் மூலம் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்றால் அதற்கு சர்வதேச சமூகத்தோடு இணைந்து. அது தொடர்பான தீர்மானங்களை எடுப்போம். அப்படிப் பதவி விலகுவதென்பது தான் எங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்குமென்றால், நாங்கள் அதனைச் செய்யத் தவறமாட்டோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை தாருங்கள் அதன் மூலம் தமிழருக்கான தீர்வு பெற்றுத்தருவோம் என சொல்லி தமிழருக்கிருந்த அனைத்து உரிமைகளையும் பறிகொடுக்க வழிவகை செய்தவர்கள் இன்று இப்படி சொல்வதானது எந்தவகையில் நியாயம் என கேட்கின்றனர் மக்கள் புதிய அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்த அனைத்து தேவைகளையும் தமக்கு பெற்றுக்கொண்ட பின்னர் இப்போது அரசை குறை சொல்லத் தொடங்கியுள்ளதுடன் அரசிலிருந்து விலக அடுத்த தேர்தலுக்கான வாக்கு வேட்டைக்கு இப்போதே இவர்கள் ஆரம்பித்துள்ளதாகவும் மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

தேர்தல் காலங்களில் தமக்கான வாக்கு வங்கியை நிரப்பும் ஏமாற்று வித்தையாகவும் இந்த யுக்தியைத்தான் காலாகாலமாக இவர்கள் செய்து வந்திருக்கின்றார்கள். இதற்கு நல்ல எடுத்தக் காட்டாக இதே கூட்டமைப்பினர்தான் சந்திரிக்கா அம்மையார் கொண்டு வந்த மிக சிறந்த தீர்வை அன்றைய எதிர்க்கட்யியும் இன்றைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொழுத்தி தீர்வுத்திட்டத்தை நிராகரித்து மக்களை முள்ளிவாய்க்கால்வரை அள்ளிச் சென்று பலிகொடுத்தார்கள். இவர்களா இனியும் தமிழ் இனத்துக்காக பாடுபடபோகி றார்கள்.

எமது இனம் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் இவர்களது பேச்சைக்கேட்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

எனினும் அது நடைபெறவில்லை. மக்கள் தமது அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்ளகூட இன்று விதியில் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

தமது போராட்டங்களின் மூலமாக வும் தீர்வு கிடைக்காத காரணத்தால் மக்கள் விரக்தியின் உச்சத்தில் இருக்கின்றனர். இந்த மக்களிடம் மாவையார் மறிபடியும் பொய் சொல் வது எடுபடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதி 03

# வாழ்க்கையை சுமந்து நிற்கும் இலக்கியம்!

## இது ஒரு "கதை சொல்லும் பாடம்"

"சொல்லின் செல்வர்" - இரா. செல்வவடிவேல்

நளனும் தமயந்தியும் சிறிது காலம் வெகு சுகமாக வாழ்ந்தார்கள். ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பெற்றோர் ஆயினர். அழகான மக்களைப் பெற்ற ஆனந்தத்தோடு பல விதமானதான தருமங்களைச் செய்து வெகு நீதியாக அரசு புரிந்து குடி மக்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லாமல் எல்லோரும் புகழ்ந்து கொண்டாடும் படியாக இருந்து வருகிற சமயத்தில் நள மகாராஜனைச் சனியன் பிடித்தது. சனியனா? அட சனியனே! சனியனாவது மனிதரைப் பிடிக்கிறதாவது! இதெல்லாம் என்ன புரளி புளுகுகள் என்று நம்மிற் சிலருக்குத் தோன்றலாம்.

சனியன் பிடித்தான் என்றால் கெட்ட காலம் வந்தது என்றுதான் அர்த்தம். சனியன் என்கிற ஒரு தெய்வம் இருக்கிறதோ இல்லையோ, நம்மை அறியாமல் நாம் விலக்கவும் முடியாமல் நமக்கு துன்பங்கள் வந்து விடுகிற போது நாம் என்ன எண்ணுகிறோம்.? நம்முடைய கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தியினால் அப்படி நேர்ந்து விட்டதாகத்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படி கெடுதல் செய்கிற சக்திக்கு நம் முன்னோர்கள் சனீகரன் என்று பெயர் கொடுத்தார்கள். அவ்வளவுதான் அந்தச் சனியை பற்றி இப்போது நாம் கருதினால் நம்முடைய நவீன மனதிற்கு நகாரீகமாக இருப்பதில்லை. சைத்தான் பிடித்துக்கொண்டான் என்று சொன்னாலும் சம்மதியோம். ஆனால் சனியன் என்று சொன்னால் அது சரியல்ல என்றும் தோன்றும். சரி இந்தச் சனியன் கிடக்கட்டும். கதைக்குப் போவோம். நள மகாராஜனுக்கு கெட்ட காலம் வந்தது. நளனுக்கு தாய்வழி உறவினரான புஷ்கரன் என்ற அரசன் நளனைச் சூதாட அழைத்தான். சூதாட்டமே கூடாது என்று சொல்லக்கூடிய நளன் தனது கெட்ட கால புத்தியினால் சூதாட சம்மதித்தான். மாகாபார தத்தில் தர்மன் போல ஆடினார். கெட்ட காலத்தில் வெற்றியடைவதுண்டா? ஒவ்வொன் றாகத் தன்னுடைய செல்வங்களை எல்லாம் இழந்து விட்டுக் கடைசியாகத் தன்னுடைய இராஜ்யத்தை பணயமாக வைத்து அதையும் இழந்து விட்டான். இனிமேல் வைப்பதற்கு ஒரு உடைமையும் இல்லை. தன் மனைவி தமயந்தியும் குழந்தைகளும்தான் மிச்சம். சூதாட்டத்தின் தன்மையைப் பாருங்கள். தோற்க தோற்க மேலும் மேலும் வெறி வந்தது. அடுத்த ஆட்டத்தில் வெற்றி பெறலாம் என்று பின்னும் பின்னும் ஆடச் செய்யும் சூது பற்றிய திருவள்ளுவரின் கருத்தை இன்றைய இளைஞர்கள் அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

ஒரு எய்தி நூறு இழக்கும் கூதர்க்கும் உண்டாம் சொல் நன்று எய்தி வாழ்வதோர் ஆறு? சூது ஆட்டத்தில் ஒன்றைப் பெறுவர், ஆனால் நூற்றை இழப்பர் இத்தகைய சூதாடிகளுக்கு நலமாக வாழ வேறு வழியே இல்லையா? என்ற வள்ளுவர் தொடர்ந்து சூது இழிவுகளைத் தரும் பெருமையைக் குலைக்



கும் வறுமையைக் கொடுக்கும். எனவே இத்தகைய சூது போலத் தீது இவ்வுலகில் வேறு எதுவுமே இல்லை சூது என்னும் மூதேவிக்கு ஈட்பட்டசவர் வறுமை யுற்று ஒரு நாளும் வயிறு நிறைய உண்ணார். நெஞ்சம் வருந்தி வருந்தியே துன்புறுவர் சூது பொருளைக் கெடுக்கும் பொய்யினை ஆக்கும் அருளை அழிக்கும் துயரத்தில் ஆழ்த்தும். இழத்தொறூம் காதலிக்கும் கதை போல் உழத்தொறூம் காதற்கு உயிர் ( குறள் 940) துன்பங்களை அனுபவிக்க அனுபவிக்கதான் உயர் வாழ ஆசை மிகுதியாகும். அதேபோல் சூது ஆடபவ னுக்கு இழக்க இழக்கத்தான் ஆட்ட த்தில் வெறி அதிகமாகும். சூது என்பது காட்ஸ் விளையாட்டு முதல் நவீன இலத்திரனியல் கபடி விளையாட்டு வரை அடங்கும். இளம் சமூகம் சூதின் தாக்கத்தை அறிந்து சூட்டை நீக்கி நீக்கிக் கொள்ள வேண்டும். திருக்குறள் படியுங்கள் சூடு தணியும். நளன் சூதாட்டத்தில் எல்லா உடைமைகளையும் இழந்து விட்டு நாட்டையும் தோற்று விட்டு வேறு எதுவும் மிச்சமில்லாமல் மனைவியான தமயந்தியைக் கூட வைத்து ஆடிவிட நளன் எண்ணினான். அந்தச் சமயத்தில் அருகிலிருந்தவர்கள் அக் காரியத்தைத் தடுத்து விட்டார்கள்.

மகாபாரதத்தில் சூதாட்டம் பற்றி அறியாதவர் யாரும் இல்லை. நமக்குத் தெரிந்த அந்தக் கதையில் தருமன் சூதாடுகிறான். அவையில் தருமம் தெரிந்த பெரியார்கள் பீஷ்மன் விதுர், துரோணர் அனைவரும் இருக்கின்றனர். உடைமைகளை இழந்தான். நாட்டை இழந் தான். மனைவியை இழந்தான். நளன் அவையிலிருந்தவர்களை விட அறிவாற்றல் மிக்க பெரியவர் இருந்த அவையில் ஒரு பெண்ணை பணயப் பொருளாக வைத்து தருமன் சூதாடினான். என்றால் பெண்ணின் உரிமை எங்கே? என்று கேட்கத்தான் தோன்றுகின்றது. அந்த பெண்ணே கேட்டாள்



என்னை இழந்த பின்னர் தன்னை வைத் தாரா? அல்லது தன்னை இழந்த பின்னர் என்னை இழந்தாரா என்று பஞ்சாலி கேட்கும் கேள்வியில் உள்ள ஆழ்ந்த பொருள் நினைத்து பார்க்கப்பட வேண்டிய ஒன்றுதானே. பெண் அடிமைத்தனம் என்று சொல்கிறார்களே. மகாபாரதத்தில் பெரியவர்களிடமும் இருந்து ள்ளதா? பாரதியார் பாஞ்சாலி சபதம் பாடியது ஏன்? என்று ஒரு வினை உண்டு. பலரும் பல காரணம் சொன்னார்கள் பாஞ்சாலி சபதத்தில் இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பகுதிகள் உண்டு.

கையினாற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்
ஜயகோ வென்றே யலறி யுணர்வற்றுப்
பாண்டவர் தந் தேவியவள் பாதியுயிர்
கொண்டுவர
நீண்ட கருங் குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான். வழி நெடுக
மொய்த்தவராய்
என்ன கொடுமையாது வென்று
பார்த்திருந்தார்
ஊரவர் தங் கீழ்மை உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே
பொன்னையவர் அந்தப் புரத்தினிலே சேர்க்க
பெட்டை மரங்களென புலம்பினர்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?
பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்நல் சிதையக் கவர்ந்து போய்க்
கேடுற்ற மன்னரறங் கெட்ட அவைதனிவே
கூடுதலும் அங்கே போய்க் கோ
வென்றலறினாள்.

தொடரும்...



# தாயின் சிறப்பு

இந்த உலகை படைத்த இறைவன் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்க முடியாது என்பதால், ஒவ்வொரு மனித உயிருக்கும் தனது உருவாக தாயைக் கொடுத்தார். அன்னையும், ஆண்டவனும் தனித்தனி வடிவங்கள் இல்லை என்பதை உலகிற்கு இந்த தத்துவம் மூலம் இறைவன் உணர்த்தியிருக்கிறான். இறைவனின் படைப்பில் தன்னலம் கருதாத படைப்பு ஒன்று உண்டு என்றால் அது அன்னை மட்டுமே என்றால் அது மிகையாகாது. அம்மா என்ற சொல்லை தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் சிறப்பாக எடுத்து இயம்ப முடியாது என்பது உலகறிந்த தமிழ் அறிஞர்கள் கருத்தாகும்.

அம்மா எனும் வார்த்தையின் "அ" முதல் எழுத்து உயிர் எழுத்து. கருவில் உயிருக்கு உயிர் கொடுக்கிறாள் என்பதை விளக்குகிறது. கருவில் உருவான உயிர் உருவாக்கம் பெருவதற்கு, தாய் உடல்(மெய்) கொடுக்கிறாள் என்பதை குறிக்கவே "ம்" எனும் மெய் எழுத்து அமைந்தது. தான் உருவாக்கிய குழந்தையை பத்து மாதங்கள் சுமந்து, பெற்று, உலகின் வெளிச்சத்தை காண வழிகாட்டு கிறாள் என்பதையே கடைசி எழுத்தான உயிர்மெய் எழுத்தான "மா", குறிக்கிறது. இந்த தத்துவத்தை உலகிற்கு உணர்த்தவே உயிர், மெய், உயிர்மெய் என மூன்று எழுத்துக்கள் சேர்ந்து அம்மா என்ற சொல் உருவாக்கம் பெற்றது.

"மற்ற நாடுகளை போல் அல்லாமல் இந்தியாவில் மட்டும் பெண் என்பவள் தாயாக பார்க்கப்படுகிறாள். இந்தியாவில் பெண் என்பவள் தாயாக தரிசனம் தரும் தெய்வம். அவள் தனது முழு வாழ்க்கையையும், தாய்மைக்கே அர்பணிக்கிறாள்" இது சிகாகோ மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் இந்திய பெண்ணின் நிலைபற்றி பெருமையாகப் பேசியது.

இது போல், அன்னையின் பெருமை குறித்து அறியாதவர்கள், பேசாதவர்கள் இந்த உலகில் யாருமே இருக்க முடியாது. வணங்க வேண்டிய அன்பின் வடிவமான அன்னையை வருத்தப்பட வைக்கக்கூடாது என்று இந்த நாளிலாவது உறுதி

ந.நிருசாந்

யாழ். இந்து கல்லூரி





# முகமூடி பெண்

அனாதியன்

இன்னும் அதே தீவிரத்துடன்
நடு இரவின்
அந்தரங்கத்துள் தொலைந்து
கொண்டுதானிருக்கிறது தலைகள் அற்ற
அதுவிழியின் விசாலமான
வெளிச்சத்தில் சிறுகச் சிறுக அவிழ்ந்து
கொண்டிருக்கும் நடுநிசியின் உள்ளாடை
விடிகாலையின் முன் இருட்டின் இறுதி
மரணத்தில் அவிழ்க்கப்படும் பின்
பிரம்மாண்ட அலறலில் தீண்டப்பட்ட
இருண்மை ஒளியுடைய அதை பிரசவித்து
இறக்கும் இப்பொழுது ஆதாரமற்ற அதன்
உடலில் தலைகள் முளைத்து விட்ட தாய்
நுனிவிரலில் துள்ளிக்குதிப்பாள் சிறுமியாய்
இருக்கும் போது சிதைக்கப்பட்டு
முதியவளாகிப்போன அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகவலம்








## ஒதுக்கப்பட்டதா சசிகலா குடும்பம்?

சசிகலா குடும்பம் கட்சியிலிருந்து ஒட்டு மொத்தமாக நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதற்கு அதிமுக அடிமட்டத் தொண்டர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். சசிகலா குடும்பத்தை ஒட்டுமொத்தமாக நீக்குவதாக எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். சசிகலா குடும்பம் கட்சியிலிருந்து நீக்கப்படு வதாக அறிவிக்கப்பட்டதற்கு மக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா 70 நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு கடந்த டிசம்பர் 5ம் தேதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதையடுத்து அதிமுக பொதுச்செயலாளராக பதவியேற்றார் சசிகலா. இதைத்தொடர்ந்து ஜெயலலிதா போலவே நடை உடை பாவனை என அனைத்தையும் மாற்றினார் சசிகலா. ஜெயலலிதாவைப் போலவே அய்யங்கார் நாமம், சிகை அலங்காரம், காலர் வச்ச ஜாக்கெட் என இத்தனை நாள் இதற்காக தான் காத்திருந்தது போல் உடனடியாக இன்னொரு ஜெ.,வாக மாறினார் சசிகலா. ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதே யாரையும் பார்க்க விடாமல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் சசிகலா. மத்திய அமைச்சர்கள், ஆளுநர் என யாரையும் ஜெயலலிதாவை சந்திக்க விடவில்லை சசிகலா. வீட்டில் நடந்த மோதலில் சசிகலா ஜெயலலிதாவை தாக்கினார். அதனாலேயே உடல்நலக்குறைவு ஏற்பட்டு ஜெயலலிதா உயிரிழந்ததாக மக்கள் மத்தியில் பேச்சு இருந்து வருகிறது.

இந்நிலையில் முதல்வர் நாற்காலியில் அமர முயன்ற சசிகலா, ஜெயலலிதாவுக்கே தான்தான் அரசியலை ஊட்டியதாக கூறினார். சசிகலாவின் இந்த பேச்சு மக்கள் மத்தியில் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது. கட்சியும் ஆட்சியும் சசிகலாவின் குடும்பத்தினரின் கரங்களுக்கு சென்றதை விரும்பாத அதிமுக அடிமட்டத் தொண்டர்கள் ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்ட ஓபிஎஸ்க்கு ஆதரவு தெரிவித்தனர். சசிகலாவுக்கு ஆதரவாக வைக்கப்பட்ட பேனர்கள் கிழிக்கப்பட்டன.

இந்நிலையில் ஜெயலலிதாவுக்கு பிடிக்காத குடும்பத்தினர் ஜெயலலிதாவால் விரட்டப்பட்ட குடும்பத்தினர் கட்சியிலிருந்து விரட்டப்பட்டிருப்பது அதிமுக அடிமட்ட தொண்டர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.



## தமிழக ஆட்சியை கவிழ்ப்போம் தமிழிசை சபதம்!

தமிழகத்தில் அதிமுக ஆட்சியை கவிழ்ப்போம் என தமிழிசை பந்தயம் கட்டியுள்ளதாக அம்மா அதிமுக பேச்சாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய நாஞ்சில் சம்பத், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்காகவே வாழ்ந்த சசிகலா தற்போது சிறையில் இருக்கும் போது, அவரது குடும்பத்துக்கு எதிராக சதி செய்வது நியாயமல்ல என்று தெரிவித்தார்.

மேலும், எனக்கு தெரிந்த நண்பர் ஒருவரிடம், தமிழக பாஜக தலைவர் தமிழிசை, தமிழகத்தில் அதிமுக தலைமையிலான ஆட்சியை கவிழ்த்துவிடுவோம் என்று பந்தயம் கட்டியுள்ளார். அதிமுகவினர் பெரும்பான்மையோடு இருக்கும் போது எப்படி ஆட்சியைக் கலைக்க முடியும் என்று நண்பர் கேட்டதற்கு, ஆட்சியை கவிழ்த்துக் காட்டுவதாக பந்தயம் கட்டியுள்ளார். இந்தியா முழுவதும் அவர்கள் கொடி பறக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால், தமிழகம் காலம் காலமாக தனித் தீவாக இருந்து வருகிறது. இது பெரியாரின் கோவில், அண்ணாவின் நந்தவனம், எம்ஜிஆரின் தோட்டம், ஜெயலலிதாவின் கோட்டை. இங்கு வகுப்புவாத சக்திகள் தலை தூக்க முடியாது. இங்கு நடப்பது ஒரு கலாச்சார யுத்தம். இந்த யுத்தத்தில் டிடிவி தினகரன் தலைமை தாங்கிய அணியே வெற்றி பெறும். மத்தியில் ஆளும் பாஜக, அதிமுக அரசுக்கு எதிராக வருமான வரித்துறை, தேர்தல் ஆணையம் என எல்லா சக்திகளையும் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிவித்தார் நாஞ்சில் சம்பத்.



## சீனப்படைகள் இலங்கையில் எச்சரிக்கும் இந்திய தளபதி!

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான உடன்பாடு கையெழுத்திடப்பட்டால், அங்கு சீனக் கடற்படை மற்றும் வான் படைத் தளங்கள் அமைக்கப்படுவது உண்மையாகிவிடும் என இந்திய முன்னாள் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் அருண்குமார் சிங் எச்சரிக்கை செய்துள்ளார். சீனாவின் கசோலைப் புத்தக இராஜதந்திரத்தில் இருந்து மோசமான பாடத்தைக் கற்ற முதலாவது நாடு இலங்கையாகும். முன்னைய சீன சார்பு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் புதிய தொடருந்துப் பாதையை அமைக்கவும், கொழும்புத்துறைமுகத்தில் புதிய கொள்கலன் இறங்குதுறை அமைக்கவும் காலியையும் கொழும்பையும் இணைக்கும் நெடுஞ்சாலைகளை அமைக்கவும் அம்பாந்தோட்டை அருகே புதிதாக மத்தல ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையத்தை அமைக்கவும் சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இன்று அம்பாந்தோட்டைத் துறைமுகமும், அதற்கு அருகேயுள்ள வானூர்தி நிலையமும் பயன்படுத்தப்படாதவையை இருப்பதுடன் இலங்கைக்கு ஒரு நிதிச் சுமையாகவும் மாறிவிட்டன. சீனா சுமார் 9 பில்லியன் டொலரை முதலீடு செய்தது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்காக 1.1பில்லியன் டொலர் கடனை திரும்பி செலுத்த முடியாதிருப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது. கடன் நிவாரணம் தொடர்பான சர்ச்சைக்குரிய உடன்பாடு செய்து கொள்ளப்படவுள்ளது இதன்படி சீன நிறுவனம் அம்பாந்தோட்டை தாறைமுகத்தின் 60 தொடக்கம் 80 வீதம் வரையான முகாமைத்துவத்தை 99 அல்லது 50 ஆண்டுகள் வரையில் கட்டுப்படுத்தும் குத்தகையை பெற்றுக்கொள்ளவுள்ளது. இந்த உடன்பாடு சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டால் அம்பாந்தொட்டைத் துறைநமுகத்தில் சீனாவின் கடற்படைத் தளமும் அதற்கு அருகில் உள்ள வானூர்தி நிலையத்தில் சீனாவினக் வான் படைத் தளமும் அமைக்கப்படுவது உண்மையாகிவிடக்கூடும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் காசோலைப் புத்தக இராஜதந்திரம் என்ற தலைப்பில் இந்தியாவின் டெக்கான் குரோனிக்கல் நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையிலேயே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சில வாரங்களில் மூன்றாம் உலகப் போர்: டிரம்பின் தேர்தல் வெற்றியை எதிர்வுகூறிய தீர்க்கதரிசி!

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் தான் பதவியேற்பார் என எவரும் எதிர்பார்த்திருக்காத காலகட்டத்தில் சரியாக எதிர்வுகூறியதோடு மட்டுமன்றி தன்னைத் தானே இறைவனின் தூதர் என பிரகடனப் படுத்திக் கொண்டிருந்த தீர்க்கதரிசியான ஹொராசியோ வில்லேகாஸ் மூன்றாம் உலகப் போர் ஆரம்பமாகும் காலத்தை தற்போது எதிர்வுகூறியுள்ளார்.

அவரது எதிர்வுகூறலின் பிரகாரம் உலக அணு ஆயுதப் போர் ஆரம்பமாக ஒரு சில வாரங்கள் மட்டுமே உள்ளன என தெரிவித்தள்ளார்.

டிரம்ப் ஜனாதிபதியாக தெரிவாகிய பின், சிரியா மீது தாக்குதலை நடத்துவார் என ஹொராசியாவால் ஏற்கனவே கூறப்பட்டிருந்த எதிர்வுகூறலை நிஜமாக்கும் வகையில், டொனால்ட் டிரம்ப் அண்மையில் சிரிய ஹொம்ஸ் நகரிலுள்ள விமானப் படைத்தளத்தின் மீது வான் தாக்குதல்களை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிரியா மீதான தாக்குதலே ரஷ்யா, வட கொரியா மற்றும் சீனாவை அதிக உயிர்களை பலிகொள்ளக் கூடிய உலகப் போர் ஒன்றுக்குள் தள்ளும் என ஹொராசியோ தெரிவித்திருந்தார். இந்நிலையில் அவர் தற்போது தூய பாத்திமா அன்னை காட்சியளித்த 100 ஆவது ஆண்டு காலத்தில் மூன்றாம் உலகப் போர் ஆரம்பமாகும் என எதிர்வுகூறியுள்ளார். அந்த வகையில் மூன்றாம் உலகப் போரானது எதிர்வரும் மே 13 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 13 ஆம் திகதிக்கும் இடையில் இடம்பெறும் எனவும் இதன்போது பாரிய பேரழிவு மற்றும் மரணங்கள் இடம்பெறும் எனவும் ஹொராசியா தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டுச்செய்திகள்






## அவுஸ்திரேலிய முன்னணி தொடரில் இலங்கை நட்சத்திரம் தர்ஜினி

இலங்கையின் வலைப்பந்தாட்ட நட்சத்திரம் சிவலிங்கம் தர்ஜினி அவுஸ்திரேலியாவின், முன்னணி கழக அணியான சிற்றி வெஸ்ட் ஃபெல்கொன் அணிக்கு விளையாடுவதற்காக ஆறு மாதகால ஒப்பந்த அடிப்படையில் அவுஸ்திரேலியா பயணமாகின்றார். யாழ்ப்பாணம் ஈவினையைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்ஜினி, தனது பள்ளிக்கல்வியை வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு நுழைந்தார். அங்கு வலைப்பந்தாட்டம் விளையாட ஆரம்பித்த இவர் மிகவும் குறுகிய காலத்தில் இலங்கை வலைப்பந்தாட்ட தேசியஅணியின் நட்சத்திரமாக உருவெடுத்தார். உலகின் முதல்தர வலைப்பந்தாட்ட வீராங் கனையான தர்ஜினி சிவலிங்கம் அவுஸ்திரே லியாவுக்கு மேற்கொள்ளும் சுற்றுப்பயணம் குறித்த அறிவிப்பை அவரதுமுகாமையாளர் கோபிநாத் அவர்கள் தெரிவித்தார்.

கடந்த, 2011ஆம் ஆண்டு வலைப்பந்தாட்ட உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் சிறந்த ஷூட்டர் (஁ூழழவநச) விருதினைப் பெற்ற தர்ஜினி, கடந்த ஒரு வருடகாலமாக இலங்கைதேசிய அணி சார்பாக எந்தவொரு போட்டியிலும் பங்கெடுக்கவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 10 வருடங்களிற்கு மேலாக இலங்கைவலைப்பந்தாட்ட அணிக்காக ஆடிவந்த தர்ஜினி, கடந்த ஒரு வருடகாலமாக போட்டிகளில் பங்கெடுக்காது விலகியிருந்தமை இலங்கை அணிக்கு சர்வதேசப்போட்டிகளில் பெரும் சவாலாக இருந்த அதேவேளை, பலரை ஏமாற்றத்திற்கும் உள்ளாக்கியிருந்தது.

இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரும் தற்போதைய புருனே அணியின் பயிற்றுவிப்பாளருமான திலகா ஜினதாஸ மற்றும் தர்ஜினியின் முகாமையாளரான கோபிநாத் ஆகியோரினது முயற்சியினால் தர்ஜினிக்கு இந்த வாய்ப்புகிட்டியுள்ளது. தர்ஜினி தனது இந்த ஆறு மாதகால பயணத்தின்போது, அவுஸ்திரேலியாவின் மெல்பெர்னிலிருந்து சிற்றி வெஸ்ட் ஃபெல்கொன் (City west falcon) அணி மற்றும் சென். அல்பன்ஸ் வலைப்பந்தாட்டக் கழகம் (St. Albans Netball club) ஆகியவற்றிற்காக விளையாடவுள்ளார். அதே வேளை, அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீராங்கனையும் பயிற்றுவிப்பாளருமான நிக் ஹோலி றிச்சர்ட்சனின் பயிற்றுவிப்பின் கீழ்தன்னை தயார்படுத்தவுள்ளமை முக்கிய விடயமாகும்.



## ரங்கன ஹேரத்தின் வரலாற்று சாதனை!

இலங்கை அணியின் பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் 1990களில் அறிமுகமாகி இன்னும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தவுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான ரங்கன ஹேரத் (39) கடந்த 1999ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானார்.

விரைவில் 90"களில் அறிமுகமாகி இன்னும் டெஸ்ட் போட்டிகளில் அதிக காலம் விளையாடும் வீரர் என்ற பெருமையை ரங்கன பெறவுள்ளார். இதுகுறித்து ரங்கன கூறுகையில், பந்து வீச்சாளர்களை விட அதிக காலம் விளையாட பேட்ஸ்மேன்களுக்கு சுலபம் தான். ஏனென்றால் பந்து வீச்சாளர்களுக்கு தான் அதிகமாக காயம் ஏற்படும். நான் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதை பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை.

400 விக்கெட்களை வீழ்த்துவதும், வரவிருக்கும் இந்தியா, ஜிம்பாப்வே அணிகளுக்கெதிரான போட்டிகளில் வெற்றி பெறுவதுமே எனது இலக்காகும் என கூறியுள்ளார்.இன்னும் 27 விக்கெட்களை கைப்பற்றினால், 400 விக்கெட்களை வீழ்த்திய பெருமைக்கு சொந்தக்காரராக ஆவார் என்பது குறிப்பிடத் தக்கது.





## சங்கக்காவின் அடுத்த பரிமாணம்!

கிரிக்கெட் ஜாம்பவனும் இலங்கை அணியின் முன்னாள் தலைவருமான குமார் சங்கக்கார எதிர்வரும் சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் முதல்முறையாக வர்ணனையாளராக புதிய அவதாரமெடுக் கவுள்ளார் என சர்வதேச கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமான அறிவித்துள்ளது. இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 18ம் திகதி வரை இடம்பெறவுள்ள சம்பியன் கிண்ண தொடரில் குமார் சங்கக்கார கிரிக்கெட் களத்தில் வர்ணனையாளராக களமிறங்கவுள்ளார். சங்காவுடன் இணைந்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங், நியூசிலாந்து அணியின் பிரண்டன் மெக்கலம், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் கிரேம் ஸ்மித் ஆகியோர் இம்முறை இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன் கிரிக்கெட் தொடரில் முதல்முறையாக வர்ணனையாளர்களாக களமிறங்கவுள்ளனர். இவர்களுடன் இணைந்து சர்வதேச கிரிக்கெட் வர்ணனையாளர்களான சௌரவ் கங்குலி, ஷேன் வோர்ன், மைக்கல் ஸ்லட்டர், நஷீர் ஹுசைன், மைக்கல் அத்ரென், ஷோன் பொலக், சஞ்சய் மஞ்ரேக்கர், இயன் பிஷப், ரமீஷ் ராஜா, சிமென் டுயுல், ஆதர் அலிகான் ஆகியோரும் கடமையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தலைவன் உயிருடன்தான் இருக்கிறான் கெயிலின் பெருமிதம்!

டி20 கிரிக்கெட் போட்டியில் 10,000 ஓட்டங்களை விளாசிய முதல் வீரர் என்ற பெருமையை அடைந்துள்ளார் கிறிஸ் கெயில். ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் 20-ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் லயன்ஸ் அணியை 21 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி. குஜராத்துக்கு எதிரான இந்த ஆட்டத்தில் 77 ரன்கள் விளாசிய கெயில், டி20 கிரிக்கெட் போட்டியில் 10,000 ரன்கள் விளாசிய முதல் வீரர் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டார். இதுகுறித்து பேசிய கெயில், சாதனையைக் கடந்தவுடன் அடித்து ஆடவேண்டும் என்று எண்ணினேன். அதுபோலவே விளையாடினேன். 10,000 ரன்களை எட்டிய முதல் வீரர் என்பதில் மிகவும் பெருமை கொள்கிறேன். இந்த உலகின் தலைவன் இன்னமும் விளையாடி வருகிறான். உயிருடன்தான் இருக்கிறேன். தொடர்ந்து அதிரடி ஆட்டத்தின் மூலம் ரசிகர்களுக்கு விருந்து படைப்பேன் என்றார்.



## மலேசிய மண்ணில் கிண்ணத்தை வென்றது கிறாஸ்கொப்பர்ஸ்!

கிறாஸ்கொப்பர்ஸ் பிறிமியர் லீக் தெரிவு அணி மலேசியாவில் நடைபெற்ற ஜொலிபாய்ஸ் கிரிக்கெட் போட்டியில் சம்பியன் பட்டத்தை சவீகரித்துள்ளது. மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டி அணிக்கு 7 வீரர்களையும் 6 பந்து பரிமாற்றங்களையும் கொண்டதாக நடைபெற்றது.இதன் இறுதியா ட்டத்தில் மெல்பொர்ன் அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் பிறிமீயர் லீக் தெரிவு அணி மோதியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் பிறீமியர் லீக் தெரிவு அணி 6 ஓவர்கள் நிறைவில் 77 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய மெல்பேரண் அணி 54 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையம் இழந்தது இதனால் 23 ஓட்டங்களினால் கிறாஸ்கொப்பர்ஸ் பிறீமியர் லீக் தெரிவு அணி வெற்றி பெற்று சாம்பியனானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பம்



## சனி கிரகமே ஏலியன்களின் வாழ்விடம் உறுதி செய்தது நாசா!




சூரிய மண்டலத்தின் பெரும் கோளான சனியில் ஏலியன்கள் வசிப்பதற்கான சூழல் இருப்பதை அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். குறித்த தகவலை நாசா விஞ்ஞானிகள் அறுதியிட்டு தற்போது கூறவில்லை என்றாலும், சனியின் துணைக் கோள் ஒன்றில் அதற்கான வாய்ப்புகள் மிக மிக அதிகம் என தெரிவித்துள்ளனர்.ஆனால், இந்த தகவலானது, குறித்த துணைக் கோள் குறித்து அடுத்தகட்ட ஆய்வில் உறுதிப்படுத்தப்படும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சனியின் முக்கிய துணைக்கோளான இன்செலடஸில் மட்டுமே பூமியை போன்ற தட்பவெட்பமும், உயிர் வாழ தகுந்த சூழலும் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். குறித்த ஆய்வினை நாசாவின் ஊயளளiைெ விண்கலம் தொடர்ந்து 13 ஆண்டுகள் மேற்கொண்ட ஆய்வுகளின் பலனாக தெரிய வந்துள்ளது. இதுவரையான ஆய்வுகள் அனைத்தும் சீரான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது எனில் இன்செலடஸில் ஏலியன்கல் இருப்பது உறுதி என புவியியலாளர் துநகக்சநல ளுநநறயடன தெரிவித்துள்ளார். Cassini விண்கலம் தான் கடந்த 2005 ஆம் ஆண்டு சனியின் துணைக்கோளான இன்செலடஸில் பனிப்படலம் இருப்பதை முதன் முதலில் வெளிக் கொண்டு வந்தது. இதனையடுத்து அடுத்த 10 ஆண்டுகளில், இன்செலடஸில் 30 முதல் 40 கி.மீ பரப்பளவு கொண்ட பெருங்கடல் ஒன்று உறைந்து போயிருப்பதும் தெரிய வந்தது. சனி மற்றும் வியாழன் கிரகங்களின் பல்வேறு துணைக் கோள்களில் கடல்கள் உறைந்து போயிருப்பது விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளது என்றா லும் இன்செலடஸில் மட்டும் உயிர் வாழ்வதற்கான சூழல் இருப்பதை விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

## வீதியில் ஓடும் பறக்கும் கார் !



நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி தனியார் நிறுவனம் ஒன்று தயாரித்த ஏரொமொபில் (Aeromoble) என்னும் பறக்கும் காரானது வரும் ஏப்ரல் 20ஆம் திகதி அறிமுகப்படுத்தவுள்ளது. ஸ்லோவோகியா நாட்டை சேர்ந்த ஏரொமொபில் (Aeromoble) நிறுவனமானது பத்து ஆண்டுகளாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு தற்போது ஏரோமொபில் என்னும் பறக்கும் காரை வடிவமைத்துள்ளது. இந்த காரானது வரும் 20- ம் திகதி நடக்கவுள்ள மார்க்கஸ் மொனாக்கோ சூப்பர் கார் நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தவுள்ளது.தனிபட்ட போக்குவரத்திற்கு பயன்படும் இந்த காரானது வானிலும் சாலையிலும் செலுத்த இயலும். எனவே போக்குவரத்து நெரிசலை தவிர்க்கலாம். இரண்டு பேர் மட்டுமே அமர்ந்து செல்லக்கூடிய இந்த காரை சாலையில் செலுத்தும்போது 310மைல்கள் வரையில் செல்லலாம். மேலும் 5 அடி நீளம் கொண்டிருக்கும்.எடைகுறைவான ஸ்டீல் ப்ரேம் ஒர்க்(ளுவநநட குசயஅந றுழசம) மற்றும் கார்பன் கோட்டிங்(Carbon coating) உடன் உருவாக்கப்பட்டுள்ளதால் இந்த பறக்கும் கார் விமானமாக மாறும் போது 26அடி அகலத்துடனும் 19 அடி நீளத்துடனும் இருக்கும். இந்த காரின் ஒட்டுனர் அமரும் இருக்கை விமானத்தில் அமைக்கப்பட்டிருப்பதை போன்றே இருக்கும். இந்த காரை ஓட்டுவதற்கு விமான ஓட்டுநர் உரிமம் பெற்றிருப்பது கட்டாய மாகும்.



## நாசாவின் புதிய முயற்சி

### ரொக்கெட் ஏவப்படுவதை 360 பாகை கோணத்தில் நேரலை

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, ஓர்பிட்டல் ATK மற்றும் யுனைட்டெட் லோன்ச் அலையன்ஸ் உள்ளிட்ட (United Launch Alliance) நிறுவனங்கள் இணைந்து உலகில் முதன் முறையாக 360 பாகை கோணத்திலான வீடியோ வினை நேரலையில் ஒளிபரப்ப திட்டமிட்டுள்ளன. அதற்கேற்ப சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சரக்குகளை அனுப்பும் ரொக்கெட் ஒன்று இன்று உள்ளூர் நேரப்படி காலை 11.11 மணியளவில் (இலங்கை நேரம் 8.41 pm) ஏவப்படவுள்ள நிலையில் அதனை நேரலையில் ஒளிபரப்பு வதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.




## விலங்குகளை பரிசோதிக்க புதிய சிப்!

மனிதர்கள் நோய் தாக்கும்போது அவர்களை பரிசோதிப்பது சற்று லேசான காரியம் ஆகும். இதற்கு காரணம் தமக்கு ஏற்பட்டுள்ள நோய்கள் தொடர்பில் வாய் மூலமாக கருத்துக்களை தெரிவிக்க முடியும். ஆனால் ஐந்தறிவு படைத்த விலங்குகளில் இது சாத்தியம் இல்லை. கடுமையான பரிசோதனைகளின் அடிப்படையிலேயே அவற்றின் நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க முடியும்.

இப் பிரச்சினைக்கு தீர்வாக சிறிய ரக சிப் ஒன்றினை பொருத்தி விலங்குகளில் ஏற்படும் மாற்றங்களை அவதானிப்பதன் ஊடாக அவற்றில் ஏற்படும் நோய்களை அறிந்துகொள்ள முடியும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதற்காக அவர்கள் விசேடமான சிப் ஒன்றினை வடிவமைத்துள்ளதுடன், இதனை விலங்குகளில் பயன்படுத்துவற்கான அனுமதியை குழழன and Drug Administration நிறுவனத்திடம் கேட்டிருந்தனர்.

குறித்த சிப்பின் செயற்பாடுகளை ஆராய்ந்து பார்த்த அவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர். பெருவிரல் நுனிப் பகுதியின் அளவே உடைய குறித்த சிப் ஆனது தனித்தனியாக ஒவ்வொரு உடல் அங்கங்களில் நிறுவக்கூடியதாக இருக்கின்றது. தேவை ஏற்படின் இதனை மனிதர்களிலும் பயன்படுத்தக்கூடியதாக இருத்தில் விசேட அம்சமாகும்.



## சூரிய மின்சக்தியை 3,000 சதவீதம் அதிகரிக்கும் புதிய தொழில்நுட்பம்!

உலகின் மின்சார உற்பத்தியில் சோலார் தொழில்நுட்பமானது முக்கிய இடத்தைப் பெற்றுவருகின்றது.இதன் காரணமாக இத் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இம் முயற்சியின் பயனாக சூரியமின் சக்தியை தற்போது சேமிக்கும் திறனை விடவும் 3,000 சதவீதம் அதிகமாக சேமிக்கக்கூடிய தொழில்நுட்பத்தினை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதற்காக புதிய வகை கிரபீனைக் கொண்டு (Graphene) மின்வாய் உருவாக்கப்பட்டுள்ளது. இத் தொழில்நுட்பமானது நேரடியாக சோலார் கலங்களுடனேயே இணைக்கக் கூடிய வகையில் நெகிழ்ச்சித் தன்மை கொண்டது.மேலும் விரைவான சேமிப்பு செயற்பாட்டிற்காக வினைத்திறன் வாய்ந்த மின்கொள்ளளவிகளும் பயன்படுத்தப்ப டுகின்றன. இந்த அபார தொழில்நுட்பத் தினை அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் உள்ள RMIT பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழுவே கண்டுபிடித்துள்ளனர்.



## புதிய சிலந்தி இனம் கண்டுபிடிப்பு!

உலகில் வாழும் சிலந்தி இனங்கள் பொதுவாக அதிக விஷம் கொண்டவை. இவை தமது விஷத்தின் மூலம் இரையைக் கொன்றே உணவாக உட்கொள்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே. அதே வேளை இச் சிலந்திகளில் பல வகைகள் காணப்படுகின்றன. அவை வாழும் பிரதேசங்களுக்கு ஏற்ப அளவிலும், விஷத்தின் தன்மையிலும் வேறுபாடு கொண்டன. இப்படியிருக்கையில் மேலும் ஐம்பதிற்கும் அதிகமான புதிய இன சிலந்தி வகைகளை அவுஸ்திரேலிய ஆராய்ச்சியா ளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பகுதியில் உள்ள ஹேப் ஜோர்க் தீபகற் பத்தில் இரண்டு வாரங்களாக மேற்கொ ண்ட ஆய்விலேயே இப் புதிய இனங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதேவேளை அவுஸ்திரேலியாவில் மட்டும் 15,000 சிலந்தி இனங்கள் காணப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது இதுவரை உலகளவில் 1,200 வகையான சிலந்தி இனங்கள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை 06ம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணையிலுள்ள இலக்கு நிறுவனத்தின [illegible] கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 16.04.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org